# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 3 ஒக்டோபர் – டிசம்பர் 1997 இதழ் 4

**வரலாறுபூர்வமான கிறிஸ்தவம் போதிக்கும் மறுபிறப்பிற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கும் "தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு" என்ற போதனையை அதிக பக்கங்களுடன் வரும் இவ்விதழ் ஆராய்கிறது. இப்போதனைக்கு உரமிட்டு வளர்த்தவர் அமெரிக்க சுவிஷேசப் பிரசங்கியான சார்ள்ஸ் பினி.**



சார்ள்ஸ் கிரேன்டிசன் பினி (1792-1875)

திருமறைத்தீபம்

ISBN 1173-7255

காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. எழுதிக் கேட்கும் எவருக்கும் பத்திரிகை சந்தா எதுவுமின்றி இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ஏனையோருக்கு பத்திரிகையை அறிமுகப் படுத்தி வைப்பதன் மூலம் வாசகர்களும் இவ்வூழியத்தில் பங்கு கொள்ளலாம்.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

**ஆசிரியர்: ஆர். பாலா**
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Tel & Fax:** 64 9 527 1522
**email:** bala@ihug.co.nz

**கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத் துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கள் என்றுதான் கூற வேண்டும்.**

*- சி. எச். ஸ்பர்ஜன் (1834-1892)*

## "நவீன சுவிஷேச ஊழியம் உருவாக்கியிருக்கின்ற அனைத்தும் இன்றைய கிறிஸ்தவத்தின் துக்ககரமான உதாரணங்களாகக் காணப்படுகின்றன. தீர்மானம் எடுப்பதன் மூலம் கிறிஸ்தவர்களாக அறிவிக்கப்படுகிறவர்கள் தொடர்ந்து உலகப்பிரகாரமான வாழ்க்கையையே வாழ்கிறார்கள். "கிறிஸ்துவிற்காகத் தீர்மானம் எடுத்தல்" என்பதில் எந்தப்பொருளும் இல்லை."

"இன்றைய சுவிஷேசம்" என்ற தனது நூலில் வோல்டர் சான்ட்ரி இவ்வார்த்தைகளின் மூலம் நவீன சுவிஷேசப் பிரசங்கத்தால் உருவாகியிருக்கும் தீமையை எடுத்துக் காட்டுகின்றார். சுவிஷேசப் போதனை என்ற பெயரில் கூட்டங்களில் பாடல்களாலும், இசையாலும் கேட்பவர்களின் கவனத்தைத் திருப்பி, கூட்ட முடிவில் கிறிஸ்துவுக்காகத் தீர்மானம் எடுப்பதன் மூலம் இரட்சிப்பை உடனடியாக, அங்கேயே பெற்றுக் கொள்ளலாம் என்ற நமபிக்கையை அவர்களின் உள்ளத்தில் ஏற்படுத்தி, உணர்ச்சிகளைத் தூண்டி, துள்ளியோடிவர வைக்கும் அழைப்பைக் கொடுத்து, இதன் பலனாக இயேசுவை ஏற்றுக் கொண்டதாகத் "தீர்மானம்" எடுப்பவர்களை கிறிஸ்தவர்கள் என்று அறிவிக்கும் பணி பல காலமாக சுவிஷேச இயக்கத்தார் மத்தியில் நடந்து வரும் நிகழ்ச்சி. இவ்வாறு சுவிஷேசக் கூட்டங்களில் முன்னால் வந்து சரீரப் பிரகாரமாக ஒருவர் தம்மை ஒப்புக் கொடுக்கும் கைங்கரியத்தை ஏற்படுத்தி வைத்தவர் அமெரிக்க சுவிஷேசப் பிரசங்கியான சார்ள்ஸ் கிரென்டிசன் பினி. கிறிஸ்துவால் எழுப்பப்பட்டு, அப்போஸ்தலர்களால் வளர்க்கப்பட்டு, சீர்த்திருத்தவாதிகளாலும், பியூரிட்டன்களாலும் புதுப்பிக்கப்பட்ட வரலாற்றுரீதியான கிறிஸ்தவத்தோடு என்றுமே தொடர்பு கொண்டிராத இத் "தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு" என்ற போதனையை விளக்கும் ஜேம்ஸ் அடம்ஸின் கட்டுரை இவ்விதழை அலங்கரிக்கின்றது. இத்தகைய மனித முயற்சிகளின் மூலம் கர்த்தரிடம் மக்களைக் கொண்டு வரும் காரியத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் தெளிவு பெற்று அம்மாயையிலிருந்து விடுபடவும், வேதபூர்வமாக நற்செய்தியை நாமனைவரும் தொடர்ந்து பிரசங்கிக்கவும் இவ்விதழ் துணை புரிய ஜெபிப்போம்.

**போல் யொங்கி சோ உலகிலேயே மிகப் பெரிய சபையான கொரியா வின் யொய்டோ பூரண சுவிஷேச சபையின் போதகர். டாக்டர் பீட்டர் மாஸ்டர்ஸ், யொங்கி சோவின் இறையியற் கோட்பாடுகள் வரலாற்று பூர்வமான கிறிஸ்தவத்தைவிட்டு விலகி நிற்பதாகக் கூறுகிறார். யொங்கி சோவின் போதனைகள் புத்த மதத்தையும், யோகப் போதனைகளையும் தழுவியவை. அந்நிய மதங்களைத் தழுவிய ஆபத்தான போதனைகளை யொங்கி சோ தொடர்ந்து போதித்து மக்களை ஏமாற்றி வருகிறார்.**

# போல் யொங்கி சோவின் நான்காவது பரிமாணம்

**கடந்த இதழின் தொடர்ச்சி**



கொரிய யொய்டோ பூரண சுவிஷேச சபைப் போதகரான போல் யொங்கி சோ **(*Paul Yongi Cho*)**

போல் யொங்கி சோவின் கோட்பாடுகளையும், ஊழிய முறைகளையும் விளக்கும் நூலான நான்காம் பரிமாணத்தில் விசுவாசத்தைக் குறித்த அவரது வேதத்திற்குப் புறம்பான விளக்கங்களைக் கடந்து இதழில் பார்த்தோம். தொடர்ந்து இந்நூலில் அவர் விளக்கும் வேறு சில போதனை களையும் கவனிப்போம்.

### யொங்கி சோவின் நான்காம் பரிமாணம்

நான்காம் பரிமாணம் என்பது யொங்கி சோவின் நூலுக் குப் பெயர். ஏனெனில், நமது வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கான இரகசியம் இந்நான்காம் பரிமாணத்தைப் புரிந்து கொள்வதில்தான் தங்கியுள்ளது என்று யொங்கி சோ அறிவிக்கிறார். இதில் வியப்பான ஒரு அம்சம் என்னவெனில் இந்த இரகசியம் தனிப்பட்ட முறையில் கர்த்தரால் யொங்கி சோவுக்கு மட்டுமே வெளிப்பட்டுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவிக்கிறார். இதைத் தெரிந்து கொண்ட பின்பே அவரது வாழ்க்கை, ஊழியம் அனைத்தும் வளம் பெறத் தொடங்கியது என்பது அவரது கூற்று.

யொங்கி சோ போதிக்கும் இந்நான்காம் பரிமாணம் தான் என்ன? இது வடிவியலின் (Geometry) அடிப்படையில் யொங்கி சோ உருவாக்கியுள்ள ஒரு போதனை. வடிவியலின்படி மூன்று பரிமாணங்கள் காணப்படுகின்றன. அம்மூன்று பரிமாணங்களுக் கும் மேலாக நான்காவது பரிமாணம் என்று ஒன்றிருப்பதாக யொங்கி சோ கூறுகிறார். இந்நான்காம் பரிமாணமே முதல் மூன்று பரிமாணங்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத் திருக்கிறது என்பது இவரின் போதனை. அந்நான்காம் பரிமாணம்தான் பரிசுத்த ஆவி. எல்லாவற்றையும் தனது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பவர் பரிசுத்த ஆவி. இதற்கு ஆதாரமாக அவர் காண்பிக்கும் வேதப்பகுதி ஆதியாகம் 1:2. அங்கே, பூமி யானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல்

அசைவாடிக் கொண்டிருந்தார். இவ் வசனத்தை வைத்தே யொங்கி சோ தனது நான்காம் பரிமாணப்போதனையை உரு வாக்கியுள்ளார். அதாவது பூமியை ஆவி யானவர் அடைகாத்துக் கொண்டிருக்கிறார் என்றும், அருவருப்பாக இருந்த பூமியை அழ குள்ளதாக ஆவியானவரே தனது அடை காத்தலின் மூலமாக மாற்றியுள்ளார் என்றும் இவர் போதிக்கிறார். இதுவே சோவின் நான் காம் பரிமாணப் போதனைக்கு ஆதாரம். இதோ இதை அவரே விளக்குகிறார், "தேவன் என் இருதயத்தில் பேசினார். மகனே! எப்படி இரண்டாம் பரிமாணம் முதல் பரிமாண த்தை உள்ளடக்கித் தனது கட்டுப்பாட்டிற் குள் வைத்திருக்கிறதோ, எப்படி மூன்றாம் பரிமாணம் இரண்டாம் பரிமாணத்தை உள்ளடக்கித் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறதோ, அதேபோல் நான்காம் பரிமாணம் மூன்றாம் பரிமாணத்தை உள்ள டக்கி கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வ தோடு, ஒழுங்கும் அழகுமுள்ள ஒரு உருவாக் கும் வேலையையும் செய்கிறது. அவ் வேலை யைச் செய்கிற ஆவியானவரே நான்காம் பரிமாணம். ஒவ்வொரு மனிதனும் சரீரப்பிர காரமானவன் மட்டுமல்லாமல் ஆவிக்குரிய வனாகவும் இருக்கிறான். அவர்களுடைய இருதயத்தில் மூன்றாம் பரிமாணம் மட்டு மல்ல நான்காம் பரிமாணமும் உள்ளது. ஆகவே மனிதர்கள் தங்களுடைய தரிசனத் தையும் கனவையும் சிந்தனையையும் ஒழுங்கு படுத்தி அதை தங்களது சிந்தனையில் ஆழ்த்தி மூன்றாம் பரிமாணத்தின் மீது அடைகாத்து தங்களிலுள்ள நான்காம் பரிமாணமாகிய ஆவிக்குரிய பகுதியை ஆராய்ந்து உணர்ந்து கொண்டு மாற்றத்தை யும் வளர்ச்சியையும் அடைகின்றனர். பரிசுத்த ஆவியானவர் இதைத்தான் எனக்குக் கற்றுக் கொடுத்தார்."

மேல்வரும் போதனையைத்தான் மேலும் பல உதாரணங்களுடனும், விளக்கங்களுடனும் யொங்கி சோ தனது நூல் முழுவதும் தந்து ள்ளார். முதலில் இதைச் சுருக்கமாகப் பார்ப்போம். யொங்கி சோவின் போதனை யின்படி, ஆவியானவர் அவருக்கு அளித்த இப் போதனை மட்டுமே ஒரு கிறிஸ்தவனை வெற்றிகரமான வாழ்க்கை வாழ உதவும். இந்நான்காவது பரிமாணத்திற்குள் நுழையாத தால்தான் கிறிஸ்தவர்களில் பலர் கடவுளை மகிமைப்படுத்தும் வாழ்க்கையை வாழ முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவரும் இந்நான்காம் பரிமாணத்திற்குள் நுழைந்து ஆவியானவரைத் தங்களது சிந்தனையின் உள்ளுணர்வில் சந்திக்க வேண்டும். இதை எப்படிச் செய்வது? கனவுகள் மூலமும், தரிசனங்களா லும் மட்டுமே ஒருவர் இந்நான்காம் பரிமாணத்திற்குள் நுழைய முடியும். உதாரண மாக நமக்கு ஒரு வாகனம் தேவை என்று வைத்துக் கொள்வோம். அவ்வாகனத்தைக் கடவுளிடம் இருந்து நமது விசுவாசத்தால் அடைய வேண்டுமானால், நாம் முதலில் நமது சிந்தனையின் உள்ளுணர்வை அடைகாக்க வேண்டும். அதை எவ்வாறு செய்வது? அவ்வாகனத்தை நாம் கனவில் சந்திக்க வேண்டும். அழுத்தமாக, உறுதியாக கனவில், தரிசனத்தில் அவ்வாகனத்தைப் பார்க்கும்போது நாம் நமது சிந்தனையின் உள்ளுணர்வை அடைகாக்கிறோம் என்பது யொங்கி சோவின் போதனை. இவ்வாறாக நான்காம் பரிமாணத்திற்குள் நாம் உள்ளிடும் போது அவ்வாகனம் நமக்குக் கிடைப்பது உறுதியாகின்றது. இதுதான் யொங்கி சோவின் நான்காம் பரிமாணப் போதனை.

இப்போதனையில் ஏதும் உண்மையிருக் கிறதா? பல்லாயிரக்கணக்கானவர்களை இப்போதனை மயக்கி யொங்கி சோவைப் பின்பற்றச் செய்திருப்பதால் அதில் ஏதாவது உண்மையிருக்கத்தான் செய்யும் என்று எண்ணி அழிவதே தமிழ் சமுதாயத்தின் வழமையாகும். ஆனால் அவ்வாறு எண்ணி கிறிஸ்தவத்தைப் பாழடிக்க முனையும் இப் போதனையை நாம் ஆராயாது இருக்க முடியாது. ஆகவே கிறிஸ்தவத்தின் அடித்தள மாகவிருப்பதும், அதிகாரபூர்வமானதுமான வேதம் இதைப்பற்றி என்ன கூறுகிறதென்று பார்ப்போம்.

1. ஆதியாகம் 1:2 ஐக் குறித்த யொங்கி சோவின் போதனை இரண்டு விதங்களில் தவறானது. முதலாவதாக, ஆவி பூமிக்கு மேல் அசைவாடிக் கொண்டிருந்தார், என்பதற்கு அவர் கொடுக்கும் விளக்கம் சரியானதல்ல. அதைக் கோழி முட்டையை அடைகாப்பது போல் கற்பனை செய்து பார்க்கிறார் இம் மனிதர். அங்கே சொல்லப்பட்டிருப்பது என்னவெனில் ஆவியானவர் பூமியைப் பாது காத்துக் கொண்டிருக்கிறார் என்பதுதான். அத்தோடு, பூமி ஒழுங்காக அமைந்திருக்க வில்லை என்றுதான் பார்க்கிறோமே தவிர யொங்கி சோ கூறும் வகையில் அருவருப்புத் தரும் விதத்தில் இருந்ததாக வேதம் போதிக்க வில்லை. இரண்டாவதாக, ஒருவசனத்தை மட்டும் வைத்து அதன் அடிப்படையில் எந்தவிதமான போதனைகளையும் உருவாக் கக்கூடாது என்பது வேதம் படிக்கும் போது மனத்தில் வைத்திருக்க வேண்டிய முக்கிய மான வேத விதி. அதை மீறி இவ்வசனத்தின் அடிப்படையில் ஒரு போதனையை வேதத் திற்கு முரணாக யொங்கி சோ உருவாக்கி யுள்ளார்.

2. இந்நான்காம் பரிமாணப் போதனையை ஆவியானவர் தனக்கு விசேடமாக விளக்கி யுள்ளதாக யொங்கி சோ கூறுகிறார். இது அடுத்த தவறு. தனிப்பட்ட முறையில் தனி நபருக்கு மட்டும், அவர் எவ்வளவு தூரம்

கிறிஸ்தவ வாழ்க்கையில் மேம்பட்டவராக இருந்த போதும், வேதத்தைப் படித்து மற்றவர்களால் விளங்கிக்கொள்ள முடியாத ஒரு சத்தியத்தை ஆவியானவர் விளக்குவார் என்று கிறிஸ்துவோ, வேதமோ போதிக்கவில்லை. அத்தோடு இத்தகைய போதனையை முழு வேதத்திலும் பார்க்க முடியாது. கெரிஸ் மெட்டிக் கூட்டத்தார் இங்கேயே மோசம் போய்க் கொண்டிருக்கிறார்கள். வேத்திற்கு வெளியிலிருந்து சத்தியத்தைப் பெற்றுக் கொள்ள அவர்கள் தொடர்ந்து முயற்சி எடுப்பதால் இத்தகைய ஆபத்தை அவர்களால் தவிர்க்க முடியாமலிருக்கிறது. யொங்கி சோவுக்கு மட்டும் வேதத்தில் காணப்படாத, வேதத்திற்கு முரணான ஒரு போதனையை ஆவியானவர் அளித்துள்ளார் என்று நம்புவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், ஆவியானவரையும், வேதத்தையும் அவமதிப்பதாகும்.

3. பரிசுத்த ஆவியை நான்காம் பரிமாணமாக வேதம் எங்கும் வர்ணிக்கவில்லை. யொங்கி சோ பரிசுத்த ஆவியைப்பற்றிய பல தவறான எண்ணங்களைக் கொண்டுள்ளார். அவரது கூற்றுப்படி நாம் ஆவியைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில்தான் நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சி தங்கியுள்ளது. ஆனால் வேதம் ஆவியானவர் எல்லாக் கிறிஸ்தவர்களிலும் அவர்களுடைய அனுமதிக்குக் காத்திராது கிரியை செய்கிறார் என்று போதிக்கின்றது. இதனால் நாம் செய்ய வேண்டிய தொன்றும் இல்லை என்று நாம் எண்ணி விடக் கூடாது. வேதம் ஆவிக்குரிய செயல்களை நாம் செய்ய வேண்டுமென்று போதிக்கின்றது. அதாவது பரிசுத்த ஆவி நம்மில் குடிபுகுந்திருப்பதால் அவரது இலட்சணங்களைக் கொண்ட மனிதர்களாக அவரது வழிப்படி வேதம் போதிக்கும் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதுதான் இதற்குப் பொருள். ஆனால், பரிசுத்த ஆவியின் கிரியைகள் நம்மில் காணப்படவும், அவரது ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்ளவும் நமது சிந்தனையின் உள்ளுணர்வைக் கட்டுப்படுத்தி நமது முயற்சியால் ஆவியின் உலகில் புக வேண்டுமென்று போதிப்பது அந்நிய சமயங்கள் போதிக்கும் போதனை. இதற்கும் வேதத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. யொங்கி சோ, உளவியல் மற்றும் புத்த மதக் கருத்துக்களுக்கு கிறிஸ்தவ வடிவம் கொடுப்பது தெளிவாகத் தெரிகின்றது.

4. கனவு மற்றும் தரிசனங்கள் காண்பதன் மூலம் தனக்குத் தேவையானவற்றை ஒருவர் கடவுளிடம் இருந்து பெற்றுக் கொள்ள முயல வேண்டும் என்று போதிப்பது புறமதப் போதனை. இதற்கு யொங்கி சோ கொடுக்கும் வேத உதாரணங்கள் சிரிப்புக்கிடமானவை. வேதப் பகுதிகளை அவர் திரிபுபடுத்தி தனது கருத்துக்களை விளக்கப் பயன்படுத்திக் கொள்கிறார். உதாரணத்திற்கு, ஆபிரகாமின் முன் கர்த்தர் தோன்றி வானத்து நட்சத்திரங்களைக்காட்டி, அந்தளவுக்கு உனது வம்சத்தைக் கட்டியெழுப்புவேன் என்று கூறியதை இவர் திரிபுபடுத்தி, ஆபிரகாம் அந்நட்சத்திரங்களை அடிக்கடி உற்றுப்பார்த்து தன் மனதிலும், கற்பனையிலும் அவற்றைத் தனது பிள்ளைகளாகப் படம்பிடித்து, தனது சிந்தனையின் உள்ளுணர்வைக் கட்டுப்படுத்தியதால் அக்கனவு நான்காம் பரிமாணமாகி அவனது சரீரத்தில் கிரியை செய்யத் தொடங்கியதாகவும், அதனால் அவர் தனது சரீரத்தில் வாலிபத்தன்மையைப் பெற்றதாகவும் போதிக்கிறார். இவ்வேதப் பகுதிக்கு இவ்வாறு விளக்கம் கொடுப்பது வேதவிதிகளை மீறுவதாகும். இதிலிருந்து யொங்கி சோ வேதப் பகுதிகளுக்கு தவறான பொருள் கொடுப்பதைப் பார்க்கலாம்.

4. யொங்கி சோவின் போதனைகளினால் கர்த்தர் மகிமைப் படுத்தப்படுவதில்லை. மனிதனே மகிமைப் படுத்தப்படுகிறான். மனிதன் தனது வல்லமையைப் பயன்படுத்தி அநேக காரியங்களை வாழ்க்கையில் சாதித்துக் கொள்ளலாம் என்பதே இவரது போதனை. நோர்மன் வின்ஸன்ட் பீல் என்ற மனிதர், "சாதகமான எண்ணங்களை எண்ணுவதன் வல்லமை" என்ற நூலை எழுதிப் புகழ் பெற்றார். இம் மனிதர் இராஸ்மஸைப் போன்ற ஒரு மனித நலவாதி (Humanist). இப்போதனையைப் பினபற்றும் இன்னுமொரு அமெரிக்கப் பிரசங்கி "கண்ணாடி மாளிகையின்" ரொபட் சூளர். இதே போதனைக்கு யொங்கி சோ வேதத்தைப் பயன்படுத்தி விளக்கம் கொடுக்க முயல்வது கண்கூடு. கர்த்தர் இறைமையுள்ளவர், அவர் தனது திட்டங்களை மனிதன் மூலம் நிறைவேற்றத் தன் சித்தப்படி செயல்படுகின்றார் என்ற போதனைக்கு யொங்கி சோவின் ஏட்டில் இடமில்லை.

5. இறுதியாக, யொங்கி சோவின் நான்காம் பரிமாணப் போதனைக்கு வேதத்தில் இடமில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வேதத்தை, வேதம் போதிக்கும் முறையில் மட்டுமே புரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படை சத்தியத்தை இம்மனிதர் முற்றாக நிராகரித்து, வேதத்தைத் தனது சுயநலத்திற்காகப்பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். ஒரு போதனை எத்தனை கவர்ச்சியுள்ளதாக இருந்தாலும், அது எவ்வளவு கவர்ச்சிகரமான, புத்திசாலித்தனமுள்ள மனிதரால் போதிக்கப் பட்டாலும் அது வேதத்திற்குப் புறம்பானதெனில் அதை நாம் என்றுமே புறக்கணிக்கத் தயங்கக்கூடாது. ஒருவர் பெரிய மனிதராக இருக்கலாம். கர்த்தரின் பெயரில் பெரும் காரியங்களைச் செய்பவர் போல் தென்படலாம். ஆனால் அம்மனிதர் வேதத்தை அடி

8 - ஆம் பக்கம் பார்க்க

**சபையில் முதிர்ச்சியும் அனுபவமும் கொண்ட சகோதரர்களின் சோதனைக்குத் தம்மை ஒப்புக் கொடுக்க மறுப்பவர்கள் பிரசங்க ஊழியத்திற்கு தகுதியற்றவர்கள் என்றே கூற வேண்டும்.**

# ஊழிய அழைப்பு!

**கடந்த இதழின் தொடர்ச்சி**

கடந்த இதழில் ஊழிய அழைப்புக்கான இலட்சணங்களில் பத்தைப் பார்த்தோம். இனித் தொடர்ந்து மிகுதிப் பகுதியையும் ஆராய்வோம்.

***11. அந்நியரை உபசரிக்கிறவனாக இருக்க வேண்டும்.*** *(1 தீமோ 3:2; தீத்து 1:8).* ஊழியக்காரர்களின் வீடு எப்போதும் மற்றவர்களுக்குத் திறந்திருக்க வேண்டும். நம்மிடம் இருப்பதை நம்மை அறியாத பிறருடன் பகிர்ந்து கொள்வதையே விருந்தோம்பல் முக்கியமாக வலியுறுத்துகிறது. அன்பே இங்கு பிரதானமானது. நற்செய்தியை எடுத்துக்கூறும் மேலான தகுதியைப் பெற்றிருக்கும் ஊழியக்காரன் தன்னிடம் வருபவர்களை அன்போடு உபசரித்து அவர்களது தேவைகளைக் கவனிப்பவனாக இருக்க வேண்டும்.

***12. நல்லவற்றையே எப்போதும் நாடுபவனாக இருக்க வேண்டும்.*** *(தீத்து 1:8).* தமிழ் வேதத்தில் இதன் மொழிபெயர்ப்பு நல்லோர் மேல் பிரியமுள்ளவன் என்று காணப்படுகிறது. ஆனால் மூலத்தில் "நல்லவை" என்றே இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். பவுல் பிலிப்பியர் 4:8 இல் கூறுவது போல் ஊழியத்திற்கு தகுதியுள்ள எவரும் உண்மையுள்ளவைகளையும், ஒழுக்கமுள்ளவைகளையும், நீதியுள்ளவைகளையும், கற்புள்ளவைகளையும், அன்புள்ளவைகளையும், நற்கீர்த்தியுள்ளவைகளையும் நாடுபவர்களாக இருப்பார்கள். பிரசங்க ஊழியன் கேள்விக்குரியுள்ள காரியங்களில் நேரத்தை செலவிடமாட்டான். ஒரு பிரசங்கி தெளிவான சத்தியத்தை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டி அதை மட்டுமே நாடி நிற்பான். கண்டதையும் படித்து தனது மனதைக் குழப்பிக் கொள்பவர்கள் தேவனுடைய சத்தியத்தைப் போதிக்கும் தகுதியில்லாதவர்கள். இன்றைய ஊழியக்காரர்களில் அநேகர் இதை சிந்தித்துப் பார்ப்பது நல்லது. நல்லவற்றை நாடி சத்தியத்தில் நல்லறிவு பெறாமல் தாம் ஊழியம் செய்யும் மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தால் நியாயத்தீர்ப்பு நாளில் கர்த்தரின் கண்டனத்துக்கே உள்ளாக நேரிடும். அதுமட்டுமல்லாமல் நல்லதையும் நாடி நிற்காமல், சத்தியத்திலும் தெளிவில்லாமல் ஆத்துமாக்களுக்கு தொடர்ந்து எதையெதையோ போதிப்பதைப் போன்ற கொடுமை வேறெதுவுமிருக்க முடியாது.

***13. தெளிந்த புத்தியுள்ளவனாக இருக்க வேண்டும்.*** *(1 தீமோ. 3:2; தீத்து 1:8).* ஊழியக்காரர்கள் வேத அடிப்படையில் எதையும் பகுத்தறிந்து நல்ல தீர்மானம் எடுக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். தனது தீர்மானங்களில் உறுதியுடையவர்களாகவும் இருக்க வேண்டும். நிலை தடுமாறுபவர்களாகவும், காற்றில் திசை தெரியாமல் பறக்கும் இலைகளைப்போல எதை எதையோ பின்பற்றுபவர்களும் ஊழியத்திற்கு தகுதியற்றவர்கள். சிலர் மதில் மேல் பூனைபோல் ஊழியம் செய்ய முற்படுகிறார்கள். செல்வாக்கை இழந்து விடும் பயத்திலும், மற்றவர்களைப்



**ஒருவன் மக்களைக் கிறிஸ்துவில் கட்டியெழுப்பி சேவை செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் மட்டும் போதக ஊழியத்தை நாடிவருவானானால், திருச்சபையின் தலைவரான கிறிஸ்து அவனைப் புதிய உடன்படிக்கையின் சேவகனாகத் தயார் செய்கிறார் என்பதற்கான சில அடையாளங்களை நாம் அவனில் காணலாம்.**

***- அல்பர்ட் என். மார்டின்***

பகைக்கக்கூடாது என்ற எண்ணத்திலும் போலி நடுநிலை வகிக்க முனைகிறார்கள். இது தெளிந்த புத்தியைக் கொண்டிருப்பதற்கு அடையாளமல்ல. இது சந்தர்ப்பவாதிக்குரிய இலட்சணம். உண்மையான ஊழியக்காரன் மற்றவர்கள் இருமனமுள்ளவர்களாக செயல்படும்போது தெளிவான எண்ணத்தோடு, சீரான முடிவுகளை எடுத்து செயல்படுபவனாக இருப்பான்.

**13. நீதியும், பரிசுத்தமும் உள்ளவனாக இருப்பான்.** *(தீத்து 1:8).* இவ்வசனத்தில் இவ்விரு குணாதிசயங்களையும் விளக்கும் ஒரே கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஊழியக்காரன் அநீதிக்கு இடம் கொடுக்காமல் நீதியின் பக்கத்தில் நிற்பவனாக இருக்க வேண்டும். மற்றவர்களின் காரியங்களில் பாரபட்சம் காட்டாதவனாக நீதியைக் கடைப்பிடிப்பவனாக இருக்க வேண்டும்.

**14. பரிசுத்தமானவனாக இருக்க வேண்டும்.** *(தீத்து 1:8).* இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை ஊழியக்காரன் பரிசுத்தமானவனாக இருப்பதாக கடவுளுக்கு முன் தீர்மானம் எடுத்திருப்பவனாகக் காட்டுகின்றது. சபைத்தலைவவர்களான போதகர்களும், ஊழியக்காரர்களும் வேதத்திற்குக் கீழ்ப்படிந்து பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதை வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டிருக்க வேண்டும்.

**15. இச்சையடக்கமுள்ளவனாக இருக்க வேண்டும்.** *(1 தீமோ. 3:2; தீத்து 1:8).* பவுல் அப்போஸ்தலன் தன்னை ஒரு மல்யுத்தக்காரனுடனும், விளயாட்டு வீரனுடனும் ஒப்பிடுகிறார். ஏனெனில் அவர்கள் விளையாட்டில் வெற்றிபெற கடுமையான பயிற்சியில் ஈடுபட வேண்டும். ஊழியக்காரர்கள் தங்களது நேரத்தை வீணாக்காது முறையாகப் பயன்படுத்தி மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்க வேண்டும். ஊழியக்காரர்கள் சோம்பேரித்தனமான வாழ்க்கை நடத்துவது ஊழியத்திற்கு உதவாது. நேரம் தவறாமை, எடுத்த காரியத்தை நேரத்துடன் முடித்தல், கடமைப்பாடு ஆகியவற்றில் மற்ற எல்லோருக்கும் உதாரணமாக இருக்க வேண்டும். இவற்றில் பயிற்சிபெற்று மற்றவர்கள் கவனிக்கத்தக்கவிதத்தில் வாழ்க்கை நடத்தாதவர்கள் ஊழியத்திற்குத் தகுதியற்றவர்கள்.

**16. யோக்கியதையுள்ளவனாக இருக்க வேணடும்.** *(1 தீமோ. 3:2).* மற்றவர்கள் மதிக்கும்படியான குணங்களைக் கொண்டிருக்க வேண்டும். நன்னடத்தை, பொது இடங்களில் முறையாகப் பேசுதல், மற்றவர் மனங்கோணாதவிதத்தில் நடத்தல் என்பவற்றையே இது குறிக்கின்றது. மற்றவர்கள் நம்மோடு பேசப்பயப்படும் விதத்தில் நடத்தல், மனம் புண்படும்படிப் பேசுதல் என்பவை ஊழியக்காரனுக்குத் தகாது. இளம் போதகர்கள், ஊழியக்காரர்கள் தீமோத்தேயுவைப் போல இதில் அதிக கவனம் செலுத்தி யோக்கியதை உள்ளவர்களாக வளர வேண்டும்.

**17. புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாக இருக்க வேண்டும்.** *(1 தீமோ. 3:7).* கிறிஸ்தவன் என்பதால் மற்றவர்கள் தூற்றுவதைத் தவிர்ந்த வேறு எந்தக்காரணத்திற்கும் ஊழியக்காரர்கள் மற்றவர்களிடம் கெட்ட பெயர் எடுக்கக்கூடாது. வியாபாரத்திலும், வேலைத்தளத்திலும் நற்சாட்டி பெறாதவர்களும், பக்கத்து வீட்டுக்காரர்களின் மரியாதையைப் பெறாதவர்களும் சபைக்கு எவ்வளவு தேவையானவர்களாக இருந்தபோதும் ஊழியத்தை எட்டியும் பார்க்கக்கூடாது *(1 பேதுரு 4:4-16).* நற்செய்தி நமது நல்ல காரியங்களால் அலங்கரிக்கப்பட வேண்டுமே தவிர, கெட்ட காரியங்களால் நிராகரிக்கப்படக்கூடாது *(மத்தேயு 5:16; ரோமர் 2:24).*

நாம் இதுவரை பார்த்த இலக்கணங்கள் அனைத்தும் ஒருவரின் நன்னடத்தையைக் குறித்ததாக இருப்பதைக் கவனிக்கத் தவறக்கூடாது. ஏனெனில் நமது ஏனைய திறமைகள் ஊழியத்திற்கு அவசியமாக இருந்தபோதும் இவ்வத்தியாசியமான நற்குணங்கள் நிரம்பியவர்களாக நாமில்லாவிட்டால் ஊழியத்திற்கும் நமக்கும் எந்தச்சம்பந்தமும் இருக்க முடியாது. “கடவுள் அழைப்புக் கொடுத்தார்” என்று கூறிக் காளான்கள் போலத் தங்களைத்தாமே ஊழியக்காரர்களாக நியமித்துக் கொள்ளும் பலர் நிறைந்த இன்றைய தமிழ்க் கிறிஸ்தவ சமுதாயத்தில், அத்தகையோரை இணங்கண்டுகொள்ளக் கிறிஸ்தவர்கள் வேதம் போதிக்கும் இவ்விலக்கணங்களைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

**18. வசனத்தில் நல்ல போதனையைப் பெற்றுக் கொண்டவனாக இருக்க வேண்டும்.** *(தீத்து 1:9).* ஒரு போதகனுடைய முதலாவது கடமை வசனத்தில் தேர்ச்சியடைவதே. அதாவது முழு வேதத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதற்காக வேதாகமக் கல்லூரிக்குப் போயிருக்க வேண்டும், டிப்ளோமாக்கள் பெற்றிருக்க வேண்டும் என்று கூறவரவில்லை. ஏனெனில் வேதாகமக்கல்லூரிகளுக்குப் போய் “லிபரல்” களாகவும் “புதிய சுவிஷேசக் கோட்பாடுகளைப்” பின்பற்றுபவர்களாகவும் திரும்பி வந்துள்ள அநேகரை நமக்குத் தெரியும். ஆகவே, வேதாகமக் கல்லூரிகளில் மட்டும் தான் வசனத்தில் தேர்ச்சி பெற முடியும் என்று எண்ணுவதைப் போன்ற கோமாளித்தனம் வேறிருக்க முடியாது. இதற்காக வேதாகமக் கல்லூரிகளை நான் நிராகரிக்கவில்லை. தமிழ் சமுதாயத்தில் சத்தியத்தை சத்தியமாகப் போதிக்கும் கல்லூரிகளை இன்று காண்பதரிது. ஆகவே, வசனத்தில் தேர்ச்சிபெற வேறு வழிகளை நாட வேண்டும். திருச்சபைகள் ஏதாவதொரு வேதாகமக்கல்லூரிக்குப் போய்வந்த போதகர்களை மட்டும் நாடும் வழக்கத்தைக் கைவிட வேண்டும். வசனத்தில் நமது மக்கள் தேர்ச்சி பெறக்கூடிய வேறு வழிகளைக் குறித்து சபைகள் சிந்தித்து அதற்கான வகுப்புகளைத் தங்களுடைய சபைகளில் நடத்த முன்வர வேண்டும். இதைச்செய்ய முடியாத சபைப் போதகர்கள் தகுதியுள்ள, சத்தியத்தை மட்டும் போதிக்கும் வேறு போதகர்களுடன் இணைந்து ஊழியக்காரர்களுக்கான போதனைகளை அளிக்க வேண்டும். இதனால் மட்டுமே இன்று சபைகள் சத்தியத்தை பாதுகாக்கவும் சத்தியத்தில் உறுதியாகத் தரித்திருக்கவும் முடியும்.

முறையாக வசனத்தில் தேர்ச்சி பெறாமல், “கர்த்தர் அழைத்தார்” என்று கூறிக் கொண்டு பிரசங்க

மேடையில் தாவியேற முயல்வது தகாத காரியம். வேதத்தில் தேர்ச்சி பெறுவதென்பது வெறுமனே அதன் வரலாற்றையும், அமைப்பையும் பற்றி மற்றும் அறிந்திருப்பதல்ல. சிலர் அதைப்பயன்படுத்தி காதுக் கினிய கதைகளைக்கூற மட்டுமே வல்லவர்களாக இருக்கிறார்கள். ஆனால், வேதத்தின் இறையியலில் நல்ல அறிவு இருக்க வேண்டும். வசனங்களை வேதத்தின் இறையியலின் அடிப்படையில் விளக்கிப் போதிக்கும் திறமையைப் பெற வேண்டும். வேதத் தின் இறையியலில் அக்கறைகாட்டாதவர்கள் இலக் கியத்தில் அக்கறையில்லாத இலக்கிய வாத்தியாருக்கு ஒப்பானவர்கள். சபையைப் போதனையின் மூலம் மட்டுமே கட்டியெழுப்ப கிறிஸ்து ஊழியக்காரர் களை நியமித்திருப்பதால் வசனத்தில் அக்கறையுடன் தேர்ச்சி பெற ஊழியத்தை நாடுபவர்கள் வைராக்கி யம் கொண்டிருக்க வேண்டும்.

**19. ஆரோக்கியமான உபதேசத்தைப் பின்பற்றுபவனாக இருக்க வேண்டும்.** *(தீத்து 1:9).* பவுல் தீமோத் தேயுவுக்கு எழுதிய நிருபத்தில், நீ என்னிடம் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி என்று கூறுவதைப்பார்க்கிறோம் (2 தீமோ. 2:2). ஆகவே போதிக்கும் ஊழியத்தைக் கொண்டிருக்கிறவர்கள் உண்மையுள்ளவர்களாக இருப்பதோடு உண்மை யான சத்தியத்தை மட்டுமே போதிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். இங்கே உண்மைக்கும், நேர்மைக் கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். தான் காதால் கேட்கும் போதனையையெல்லாம் ஆராயாது கண்மூடிப் பின்பற்றுபவர்களும், அவசியமயற்ற இறையியல் சச்சரவுகளில் நாட்டமுள்ளவர்களும் போதக ஊழியத்திற்குத் தகுதியற்றவர்கள்.

**20. போதக சமர்த்தனாக இருக்க வேண்டும்.** *(1 தீமோ. 3:2; தீத்து 1:9).* இன்று நம்மத்தியில் அநேகர் பேச்சில் வல்லவர்களாக இருக்கிறார்கள். அது தமி ழர்களைப் பிடித்த வியாதியாய் இருக்கிறது. பேச்சும் பாட்டும் கிறிஸ்தவ ஊழியத்தையே இன்று தலை கீழாக மாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் வெறும் பேச்சால் எந்தப்பயனுமில்லை. வேதம் ஒருவன் சிறந்த பேச்சாளியாய் இருக்க வேண்டுமென்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. வேத ஆதாரமற்ற இதயத்தையும், மனதையும் பாதிக்கும் போதனையை அளிக்கும் பேச்சில் வல்லவர்கள் சாத்தானின் ஊழியர்கள். இவர்கள் அலங்காரமாக பேசலாம், ஆனால் ஆவிக்குரிய உணவை இவர்களால் அளிக்க முடியாது (1 கொரி. 14:12).

போதிக்கும் வல்லமையை பேசும் வல்லமையோடு ஒப்பிட்டுக் குழப்பக்கூடாது. பேச்சில் வல்லவன் கூட்டத்தை மயக்கலாம் ஆனால் போதக சமர்த்த னாக இருக்க முடியாது. சத்தியத்தை சாதாரண மனிதர்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் எடுத்து விளக்கும் வல்லமையே போதனையாகும். உண்மை யான போதனை, கேட்பவர்களைத் தேவனுடைய வார்த்தையால் கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கும். அதற்குக் கேட்பவர்களை மயக்கக்கூடிய கவர்ச்சி இருக்காது, ஆனால் ஆத்துமாக்களை உயிர்ப்பித்து கிறிஸ்துவில் கட்டியெழுப்பக்கூடிய வல்லமை அதில் இருக்கும். அத்தோடு ஒரு போதகன் சாதகமான போதனைகளை மட்டும் அளிக்கக்கூடாது. அவரது போதனையில் எச்சரிப்பும், கண்டிப்பும் கலந்து காணப்பட வேண்டும். ஆடுகளை ஓநாய்களிடமிரு ந்து காக்கும் வல்ல போதகர்களாக உண்மையான ஊழியக்காரர்கள் இருப்பார்கள் (தீத்து 1:10).

ஊழியத்தை நாடுபவர்கள் பதிலளிக்க வேண்டிய சில கேள்விகள்:

1. மற்றவர்களுக்கு போதிக்குமளவுக்கு சத்தியத்தை முறையாகக் கற்றிருக்கிறேனா?

2. வேதபூர்வமான சத்தியத்தை மட்டும் கற்று அதனை உடும்புப்பிடியுடன் தொடர்ந்து பின்பற்றுகிறேனா?

3. சாதகமாகவும், அதேவேளை எச்சரித்தும், கண்டித்தும் போதிக்கும் வல்லமை எனக்கிருக் கிறதா?

ஊழியககாரர்களும், ஊழியத்தை நாடுபவர்களை வழிநடத்துபவர்களும் இக்கேள்விகளுக்கு கொடுக்கும் பதில்களே அவர்களது ஊழியத்திற்கான தகுதியை நிர்ணயிக்கக்கூடியவையாக உள்ளன. இக்கேள்வி களுக்கு நேர்மையுடனும் இருதய சுத்தத்துடனும் பதிலளிக்க முடியாதவர்கள் பிரசங்க மேடையை நாடாமலிருப்பது நல்லது. அதேவேளை இதை வாசிக்கும் உங்கள் இதயத்தைக் குற்றவுணர்வு தலைகாட்டியிருந்தால் இப்போதே கர்த்தரின் மன்னிப்பை நாடி, உங்கள வழிகளைக் கர்த்தரின் துணையோடு திருத்திக்கொண்டு ஊழியத்தைக் கர்த்தருக்காக, கர்த்தரின் மக்கள் சத்தியத்தால் கட்டியெழுப்பப்படுவதற்காக மட்டும் நடத்துங்கள்.

***5 - ஆம் பக்கத் தொடர்ச்சி. . .***

யோடு மாற்றிப் போதிக்கும்போது அவரைப் பின் பற்றுவது அழிவிற்கே வழிவகுக்கும். மீகா செய்ததற் கும் யொங்கி சோவின் செயலுக்கும் ஒருவித்தியாசமு மில்லை. கர்த்தரின் பெயரைச் சொல்லி அவரது வார்த்தைக்கு எதிராகக் கோவில் கட்டினான் மீகா. இதையே யொங்கி சோவும் செய்துவருகிறார்.

(வளரும்)

***சிறு தொகையினராக இருந்தாலும் ஆவிக்குரிய, திறமையுள்ள, சிறந்த சில போதகர் களை மட்டும் தாருங்கள். கிதியோனுடன் இருந்த முன்னூறு வீரர்கள் மிதியோனின் பெரும் படையைவிட மேலானவர்கள். ஊழியத்தைக் கொண்டு நடத்த வல்ல தேவன் அத்தகைய ஊழியக்காரர்களை நம்மத்தியில் எழுப்பட்டும். - கார்டினர் ஸ்பிரிங்ஸ்***

# 10 "அர்ப்பண அழைப்பு" ஏன் தவறானது? காரணங்கள்



**1.** மனிதன் மனம், உணர்ச்சிகள், சித்தம் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறான். ஆகவே, அவனது மனத்தையும், உணர்ச்சிகளையும் தாண்டி சித்தத்தை மட்டும் அசைக்க முயல்வது தவறு.

**2.** அர்ப்பண அழைப்பு அளவுக்கு அதிகமாக மனிதனின் சித்தத்தை வசீகரிக்க முனைவதால் சத்தியத்தைத் தவிர்ந்த வேறு காரணிகளால் உந்தப்பட்டு அவன் நற்செய்தியில் ஆர்வம் கொள்ளக்கூடும். உதாரணம்: பிரசங்கியின் பேச்சுத் திறமை, இசையின் ஈர்ப்பு.

**3.** பிரசங்கத்திலிருந்து சுவிஷேச அழைப்பு எப்போதுமே பிரிக்கப்படக்கூடாது. சீர்திருத்தக் கோட்பாடுகளின்படி எந்தவொரு திருநியமமும் பிரசங்கத்திலிருந்து வேறுபடுத்தப்படக்கூடாது. சுவிஷேச அழைப்பு பிரசங்கத்தில் உள்ளடங்கியதாக இருக்க வேண்டும்.

**4.** பாவிகள் உடனடியாக அதே இடத்தில் திடீரெனத் தீர்மானம் எடுக்க வேண்டும் என்ற போதனை வேதத்திற்கு முரணானது.

**5.** சுவிஷேசப் பிரசங்கி பரிசுத்த ஆவியைத் தான் நினைத்தபடி ஆட்டி வைக்கலாம் என்ற எண்ணம் தவறானது.

**6.** இந்நவீன அழைப்பு முறை உண்மையான பாவ உணர்வை மனிதனுக்குள் ஏற்படுத்தத் தவறுகிறது.

**7.** இந்நவீன அழைப்பை ஏற்று கூட்டங்களில் முன்னால் போவதால் இரட்சிப்பை அடையலாம் என்ற எண்ணம் தவறானது.

**8.** பரிசுத்த ஆவிக்கு நமது உதவி தேவை என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் இந்நவீன அழைப்பு முறை முழுதாக ஆவியானவரின் செயலில் ஏற்படும் சந்தேகத்தின் அடிப்படையில் அமைந்தது.

**9.** வேதத்தின் மறுபிறப்பு பற்றிய போதனைகளை இது நிராகரிக்கிறது. பரிசுத்த ஆவிக்கு நமது துணை தேவையில்லை. அவரது செயலை வேறு எவரும் செய்ய முடியாது.

**10.** எந்தவொரு பாவியும் எந்நிலையிலும், எப்போதுமே தீர்மானம் எடுக்க முடியாது; எடுக்கும்படி வேதம் போதிக்கவில்லை.

(*மார்டின் லொயிட் ஜோன்ஸின் "பிரசங்கிகளும், பிரசங்கமும்" என்ற நூலின் பதின்னான்காவது அதிகாரத்திலிருந்து எடுக்கப்பட்டது.*)

**வரலாற்றுபூர்வமான கிறிஸ்தவம் போதிக்கும் மறுபிறப்பிற்கு முரணாகப் போர்க்கொடி தூக்கியுள்ள தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு" என்ற போதனைபற்றிய விளக்கக்கட்டுரை இது.**




[redacted]

**எந்தவித சுய கிரியைகளும் இல்லாமல், விசுவாசத்தால் மட்டும் நீதிமானாக்கப்பட வேண்டும் என்று போதிக்காவிட்டால், நாம் நற்செய்தியைப் பிரசங்கிக்க முடியும் என்று நான் நம்பவில்லை.**

***- ஸி. எச். ஸ்பர்ஜன்***

## அறிமுகம்

### மறுபிறப்பு என்றால் என்ன?

*ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காண மாட்டான் (யோவான் 3:3). இயேசு கிறிஸ்து, மறுபிறப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் பொருட்டு ஒருவருமே மறுபிறப்படையாமல் பரலோகத்தை அடைய முடியாது என்று கூறுகிறார். இப்போதனையை சரிவரப்புரிந்து கொள்ளாததால் ஏற்படும் தவறுகளால் கிறிஸ்தவ சபைக்கு பெரும் ஆபத்துக்கள் நேரிட்டுள்ளன. கர்த்தருடைய செயலினால் மட்டுமே ஒருவர் மறுபிறப்படைய முடியும். இது மனிதனால் ஆகக்கூடியதல்ல. மறுபிறப்பென்பது கர்த்தர் நம்மில் எற்படுத்தும் ஒரு மாற்றமேயல்லாது நமக்குள் நாமே செய்து கொள்ளும் ஒரு காரியமல்ல. அப்போஸ்தலனான யோவான் தனது நற்செய்தி நூலின் முதலாவது அதிகாரத்தில் இதனை மிக அழகாகப் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார்.*

### தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு என்றால் என்ன?

*சபை வரலாறு மறுபிறப்புப் போதனை பற்றிய பல தவறான போதனைகளைச் சந்தித்துள்ளது. இப்போதனைகள் மனிதன் தனது சுய முயற்சியால் மறுபிறப்படைய முடியும் என்று போதிப்பதன் மூலம் வேதத்தின் போதனையைவிட்டு விலகி நிற்கின்றன. இத்தகைய போலித்தனமான போதனைகளைப் பின்பற்றுவதன் மூலம் சபைகள் பல தவறான வழிகளை நாடித் தறி கெட்டுப் போயுள்ளன. திருமுழுக்கின் மூலம் மறுபிறப்பு என்ற போதனையை வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு விதங்களில் பின்பற்றி ரோமன் கத்தோலிக்க சபை, ஆங்கிலிக்கன் சபை, லூதரன் சபை மற்றும் வேறு பல சபைகளும் வீண்போயுள்ளன. இத்தகைய வேத்திற்கு முரணான போதனைகளைப் பின்பற்றி இச்சபைகள் நடைமுறையில் பல தவறான வழக்கங்களைப் பின்பற்றத் தொடங்கின.*

*பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருமுழுக்கின் மூலம் மறுபிறப்பு என்ற போதனையைப்போல பெரும் சர்ச்சையை எழுப்பிய வேறு போதனைகளில்லை. இந்நூற்றாண்டின் பெரும் பிரசங்கியாகவிருந்த சார்ள்ஸ் ஸ்பர்ஜன் (1834-1892), 1864 ம் ஆண்டில் வெளியிட்ட பிரசங்கங்களில் இத்திருமுழுக்கின் மூலம் மறுபிறப்பு என்ற போதனையைச் சாடி*

**கிருபை அந்நியர்களை கடவுளின் அன்புக்குரிய குழந்தைகளாக மாற்றக்கூடியது.**
*- ஸி. எச். ஸ்பர்ஜன்*

வெளியிட்ட பிரசங்கங்களே அநேகம். இப்போதனை திருமுழுக்கைப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஒருவர் மறுபிறப்பை அடையலாம் என்று போதிக்கின்றது. இத்திருநியமம் மனிதனால் நிறைவேற்றப்படுவதால் மனிதனே ஒருவரில் மறுபிறப்பை ஏற்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருக்கிறான் என்பது இப்போதனையின் பொருள்.

ஆனால், இருபதாம் நூற்றாண்டுத் திருச்சபை, தீர்மானத்தின் மூலம் மறு பிறப்பு என்ற போதனையின் மூலம் இதைவிட ஆபத்தான ஒரு மறைமுக மான போலிப்போதனையை எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது. இவ் விரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு என்ற போதனை, மறுபிறப்பு தீர்மானம் எடுப்பவரின் செய்கையில் தங்கியுள்ளதாகப் போதிக்கின்றது; திருமுழுக்கின் மூலம் மறுபிறப்பு என்ற போதனை அது திருமுழுக்கு அளிப்பதில் தங்கியுள்ளதாகப் போதிக்கினறது. ஆகவே, மறுபிறப்பு என்பது இந்த இருவேறு மனிதனின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது என்பது இவற்றின் போதனை. மனிதன் சுயமாக நிறைவேற்றக் கூடிய ஒருசில நடவடிக்கைகளின் மூலம் மறுபிறப்பை ஒருவர் அடைய முடியும் என்பது தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு என்ற போதனையின் பொருள். இன்றைய சுவிஷேச உலகைப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கும் ஒரு பெரு வியாதியாக இப்போதனை காணப்படுகின்றது.


## நமது நோக்கம்.

எந்தவித கேடான எண்ணமும் இல்லாமல், தேவனை மகிமைப்படுத்தும் படியாக கிறிஸ்தவர்கள் அனைவரும் வேதபூர்வமான ஒரே கோட்பாட்டை யும், நடைமுறை வழக்கங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு என்ற போதனையைக் கடைப்பிடிப்பவர்களுடைய இறையியற் கோட்பாடுகளையும், பயிற்சியையும் ஆராய்வதே எமது நோக்கம். கிறிஸ்தவர்களாகிய அனைவரையும் நாம் நேசிக்கும் அதே வேளை, சார்ள்ஸ் ஸ்பர்ஜனின் கீழ்வரும் கூற்றையும் நாம் இதயபூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம்:

> ஐக்கியத்தை வளர்க்கும் மேலான வழி சத்தியத்தை வளர்ப்பதே. நம்மொவ்வொருவரிடமும் காணப்படும் தவறுகளுக்கு நம்மை ஒப்புக் கொடுப்பதன் மூலம் நம்மத்தியில் வளரும் ஐக்கியத்தால் எந்தப்பனுமில்லை. கிறிஸ்துவுக்குள் நாம் ஒருவரையொருவர் நேசித்தல் அவசியம்; அதேவேளை ஒவ்வொருவரிடத்திலும் காணப்படும் தவறுகளைப் பார்க்க முடியாதளவுக்கு, முக்கியமாக நம்மில் காணப்படும் தவறுகளைப் பார்க்க முடியாதளவுக்கு நாம் ஐக்கியத்தில் இருத்தல் ஆகாது. தேவனுடைய வீட்டை சுத்தமாக்கி னால் மட்டுமே ஆசீர்வாதங்களின் காலங்கள் உதயமாகும்.[2]

ஆகவே, ஏனைய கிறிஸ்தவர்களுடைய நேர்மையைச் சந்தேகிப்பதோ அல்லது அவர்களை நிந்திப்பதோ நமது நோக்கமல்ல. கிறிஸ்துவுக்குள் இருப்பதுபோல், எல்லாக் கிறிஸ்தவர்களையும் சத்தியத்தின் அடிப்படையில் ஐக்கியத்தில் கொண்டு வருவதே நமது நோக்கமாகும்.

கிறிஸ்துவின் சபையில் ஐக்கியத்தை ஏற்படுத்த நாம் உறுதி பூண்டிருப்பதால் போலித்தனமான வழிகளில் இருந்து விலகி கர்த்தரின் சத்தியத்தை நாம் நாடுவோம். “தீர்மானம் எடுத்துவிட்டோம் அல்லது அடையாள அட்டை யில் கையெழுத்திட்டுவிட்டோம், ஆகவே, தேவ கோபம் இப்போது நம்மேலில்லை, நாம் நிச்சயமாக பரலோகத்தை அடையப்போகிறோம்” என்ற மாயத்திலிருப்பவர்களை விடுவிக்க இத்தீர்மானத்தின் மூலம் மறு பிறப்பு என்ற வழி முறையை சபைகள் அறிய அதன் உண்மைத் தோற்றத்தை நாம் வெளிப்படுத்தல் அவசியம். நற்செய்தியே இரட்சிப்பை அளிக்கும் தேவ வல்லமையைக் கொண்டிருப்பதோடு, கிறிஸ்தவ ஐக்கியத் திற்கும் மெய்யான அத்திவாரமாக இருப்பதால் அதன் பரிசுத்தத்தில் நாம் மிகுந்த அக்கறை எடுக்க வேண்டியதவசியம்.



*ஜொனத்தன் எட்வர்ட்ஸ்*

*18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் மிகப் பிரசித்தி பெற்ற பிரசங்கியாக விளங்கியவர். நொதாம்டனில் போதகராகவும், நியூஜேர்ஸி இறையியல் கல்லூரியின் தலைவராகவும், அமெரிக்க இந்தியர்கள் மத்தியில் மிஷனரியாகவும் பணி புரிந்தவர். எட்வர்ட்ஸ் பதினெட்டாம் நூற்றாண்டின் மிகப் பெரும் சிந்தனையாள ராக வரலாற்றால் அங்கீகரிக் கப்பட்டவர்.*

## தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பும் ஆவிக்குரிய ஆலோசனையும்

தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு என்ற இப்போதனை எதைப்பற்றியது என்று இன்னும்கூட சிலர் சரியாக விளங்கிக் கொள்ளாதிருக்கலாம். நம் நாட்டிலும், மேலை நாடுகளிலும் பல கிறிஸ்தவ ஸ்தாபனங்களால் நடத்தப்பட்டு வரும் ஆவிக்குரிய ஆலோசனை வழங்குவது எப்படி? என்று போதிக்கும் வகுப்புகளைப்பற்றியும், ஆத்துமாக்களை ஆதாயப் படுத்தும் கிறிஸ்தவ கூட்டங்கள் பற்றியும் இவர்களுக்குத் தெரியாம லிருக்கலாம். இத்தகைய கூட்டங்களில், ஒவ்வொரு வெற்றிகரமான ஆவிக்குரிய ஆலோசனையும் அதன் இறுதியில், ஆலோசனை பெறுபவருக்கு இரட்சிப்பில் உறுதியான நிச்சயத்தைத் தருவதாக இருக்க வேண்டும் என்றும் போதிக்கப்படுகின்றது. ஆலோசனை பெறும் ஆத்துமாக்கள் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஒத்துப் போகும் சரியான பதில்களைத் தந்திருப்பதாலும், "பாவியின் ஜெபத்தை" ஜெபித்திருப்ப தாலும் அவர்கள் நிச்சயமாக இரட்சிப்பை அடைந்திருக்கிறார்கள் என்று நம்ப வைக்க வேண்டும் என்று இக்கூட்டங்களில் ஆலோசனையாளர் களுக்கு அடிக்கடி போதிக்கப்படுகின்றது.

இத் தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு பற்றியும், கூட்டங்களில் ஆத்துமாக் களுக்கு அளிக்கப்படும் ஆலோசனை பற்றியுமான ஒரு உதாரணத்தை பிரபலமான ஒரு தற்கால பிரசங்கி விளக்குவதைப் பார்ப்போம்: ஆண்டவரை அறியாத "ஆத்துமாவை" நோக்கி சில கேள்விகளைக் கேட்குமாறு இவர், "திருவாளர் ஆத்துமாவை ஆதாயப்படுத்துபவரைத்" தூண்டுகிறார். "திருவாளர் ஆத்துமா" இக்கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில்களைக் கொடுத்தால் அவரைப் பாவியின் ஜெபத்தைச் ஜெபிக்கும்படி செய்து முடிவில் அவர் இரட்சிப்பை அடைந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.[3] இத்தகைய ஆலோசனைகளின் பெரும் பகுதி ஆத்துமாக்கள் "தீர்மானம்" எடுப்பதன் மூலம் மறுபிறப்பு அடைகிறார்கள் என்று அறிவிப்பதிலேயே முடிவடைகின்றது. உலகின் பல பாகங்களிலும் நடத்தப்பட்டு வரும் பெரும் சுவிஷேசக் கூட்டங்களில் இத்தகைய ஆலோசனைகளே வழங்கப்படுகின்றன. இப்பெரும் சுவிஷேசக் கூட்டங்கள் பெரிய தொழிற்சாலைகளைப்போல ஒரு வாரத்தில் பத்தாயிரக் கணக்கானவர்களைத் "தீர்மானம்" எடுக்கும்படிச் செய்துவிடுகின்றன.

"பெனர் ஒப் டுருத்" தின் முன்னைய ஆசிரியரும், நூலாசிரியருமான இயன் மரே தனது "நினைவிலில்லாத ஸ்பர்ஜன்" என்ற நூலில்

> இத்தகைய ஆலோசனையே வாலிபர்கள் மத்தியில் நிகழும் ஊழியங்களிலும் கொடுக்கப்படுவதாகக் கூறுகிறார்: உதாரணமாக, மாணவர்கள் மத்தியில் இக்காலத்தில் அதிகமாக விநியோகிக்கப்படும் ஒரு சிறுநூல் ஒருவர் கிறிஸ்தவராகு வதற்கான இலகுவான மூன்று படிமுறைகளைப் பற்றி விளக்குகிறது: முதலாவது ஒருவர் தனது பாவத்தை அறிக்கையிட வேண்டும். இரண்டாவது, கிறிஸ்துவின் பரிகாரப்பலியை தனிப்பட்ட முறையில் விசுவாசிக்க வேண்டும். இவ்விரண்டையும் ஆரம்பப்படிகளாக அறிவிக்கும் இந்நூல் மூன்றாவது நிலையை ஏற்றுக்கொள்பவர் கிறிஸ்தவராக மாறலாம் என்று கூறுகின்றது. இம்மூன்றாவது நிலையாவது, "நான் கிறிஸ்துவிடம் வந்து அவர் எல்லோருக்குமாக செய்யதில் என்னுடைய பங்கைத் தருமாறு கேட்க வேண்டும்". இத்தீர்மானமான இறுதி நிலை என்னிலேயே தங்கியுள்ளது; "நான் கதவைத் திறக்கும்வரை கிறிஸ்து பொறுமையாகக் காத்திருக்கிறார். அதன் பின் அவர் உள்ளே வருகிறார் . . ." இக்கடைசிப்படியைக் கடந்ததும் நான் கிறிஸ்தவன் என்று நம்ப வேண்டும். இந்த ஆலோசனை பின்வருமாறு முடிவடைகிறது: "நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்பதை இன்றே யாருக்காவது தெரிவியுங்கள்."[4]


**நற்செய்தியால் குணமாக்கப்பட முடியாத வியாதிகளே இல்லை. ஒரு பாவி கிறிஸ்துவிடம் வருவானானால் அவனது வியாதி குணப்படும்.**

*- ஜே. ஸி. ரைல்*

இவ்விதமான ஆலோசனைகளில் பலவிதங்கள் காணப்படுகின்றன. ஆனால் இவை அனைத்திலும் ஒரு பொதுவான தன்மையைத் தவறாது காணலாம். அதாவது, குறிக்கப்பட்ட ஒரு ஜெபத்தை செய்வதன் மூலமோ அல்லது ஒரு அட்டையில் கையெழுத்திடுவதன் மூலமோ ஒரு தனிநபர் இரட்சிப்பை அடையலாம் என்பதுதான். ஆகவே, மறுபிறப்பென்பது மனிதனால் செய்யக்கூடிய சில நடவடிக்கைகளில் தங்கியுள்ளது என்றளவுக்கு சிறுமை படுத்தப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து பாவிகளை அணுகியபோது இவ்விதமாக எதையுமே செய்யவில்லை. இரட்சிப்பை உடனடியாக அளிக்கும் எந்தவிதமான படிமுறைகளையும் அவர் கொண்டிருக்கவில்லை. பாவிகளிடத்தில் அவர் எப்போதும் ஒரேவிதமான அணுகுமுறையைக் கையாளவில்லை. ஒவ்வொரு மனிதனையும் தனிப்பட்டவிதத்தில் இயேசு அனுகினார். இரண்டு மனிதர்களை ஒரேவிதமாக இயேசு அணுகியதாக புதிய ஏற்பாட்டில் நாம் எங்கும் வாசிப்பதில்லை. யோவான் 3 ஆம் அதிகாரத்தில் நிக்கதெமுவையும், யோவான் 4 ஆம் அதிகாரத்தில் சமாரியப் பெண்ணையும் அவர் எவ்வாறு வித்தியாசமான முறைகளில் அணுகினார் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இது தெளிவாகப் புலப்படும். ஆலோசனைகள் எப்போதுமே தனிப்பட்டவிதத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

ஒரேவிதமான, இயந்திரரீதியான, உயிரற்ற அணுகுமுறையைக் கொண்ட ஆலோசனையில் மேலும் பல பிரச்சனைகள் உள்ளன. இதை இயன் மரே பின்வருமாறு விளக்குகிறார்:

> *ஒரு மனிதன், தனது வல்லமையில் தான் வைத்திருக்கும் நம்பிக்கை தகர்க்கப்படாமலேயே தன்னை விசுவாசியாக அறிவித்துக் கொள்ளலாம். அவனது வல்லமையில் தங்கியிராத, அவனடைய வேண்டிய மாற்றத்தைப் பற்றி எதுவுமே அவனுக்குக் கூறப்படாததால், அத்தகைய மாற்றத்தை அவன் அடையாதபோது அதற்காக அவன் பயப்படுவதில்லை. அத்தகைய மாற்றம் அத்தியாவசியம் என்பதை அவன் ஒருபோதுமே கேள்விப்பட்டிராததால் தான் உண்மையில் கிறிஸ்தவனா? இல்லையா? என்று அவன் சந்தேகிக்க வேண்டிய எந்தவிதக் காரணமுமில்லை. உண்மையில் அவன் இதுவரை அடைந்துள்ள போதனைகள் அத்தகைய சந்தேகங்கள் அவனுடைய உள்ளத்தில் ஏற்படக்கூடாதென்றே தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளன. கிறிஸ்துவிற்காக தீர்மானம் எடுத்தும், தனது வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டதற்கான அடையாளங்களைக் கொண்டிராத மனிதன் "மாம்சப்பிரகாரமான" கிறிஸ்தவன் என்று அடிக்கடி கூறிவருகிறார்கள். இத்தகைய "கிறிஸ்தவன்" பரிசுத்த வாழ்க்கையைக் குறித்த போதனையைப் பெற வேண்டும் என்றும், அவன் கிறிஸ்தவத்தில் தொடர்ந்து தனது ஆர்வத்தை இழந்து வருவானேயானால் அவன் சரியாக வழிநடத்தப்படாததும், அவனுக்காக பிறர் ஜெபிக்காததும், செய்ய வேண்டிய முறையான காரியங்களை சபை சரியாக செய்யாததுமே காரணங்களாக கூறப்படுகின்றன. அம்மனிதனுடைய வாழ்க்கையில் காணப்படும் இத்தகைய உலகப்பிரமானமான இச்சைகளுக்கும், விசுவாசத்தைக் கைவிடுவதற்கான அடையாளங்களுக்கும், அவனுடைய வாழ்க்கையில் இரட்சிப்பின் அனுபவங்கள் ஆரம்பத்திலிருந்தே காணப்படாததே காரணம் என்று இவர்கள் எப்போதுமே எண்ணத்துணிவதில்லை. இவற்றைப்பற்றி இவர்கள் எண்ணத் துணிவார்களேயானால் நடைமுறையால் கொடுக்கப்படும் எல்லாவிதமான "அழைப்புகளும்", தீர்மானம் எடுக்கும் மனித முயற்சிகளும், ஆலோசனைகளும் தவிடுபொடியாகிவிடும். ஏனெனில், மனிதனுடைய இயற்கைத் தன்மையை மாற்றக்கூடிய வல்லமை அவனுக்கில்லை என்ற உண்மை இதன்மூலம் தெளிவு பெற்று மேலோங்குவதோடு, இரட்சிப்பின் அனுபவத்தை ஒருவன் சரியாக அடைந்திருக்கின்றானா? என்பதை ஒருசில மணித்துளிகளோ அல்லது நாட்களோ தீர்மானித்துவிட முடியாது அதற்கு இதைவிட மேலும் சில காலங்கள் தேவை என்பதையும் இது தெளிவாக உணர்த்தும்.*[5]



மார்டின் லாயிட் ஜோன்ஸ்

*ஐக்கிய நாடுகளின் வேல்ஸ் தேசத்திலே பிறந்த மார்டின் லொயிட் ஜோன்ஸ், இந்நூற்றாண்டின் தலை சிறந்த பிரசங்கிகளில் ஒருவராக விளங்கியவர். இருபத்தியெட்டு வருடங்களாக இலண்டனில் வெஸ்டர்ன்ஸ்டர் ஆலயத்தில் போதகராக பணி புரிந்தவர். இவரது பிரசங்கங்கள் இன்று நூல்களாகவும், ஒலிநாடாக்களிலும் தொடர்ந்து விற்பனையாகின்றன.*

தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பின் ஆலோசனைக்கூடங்கள் உருவாக்கும் எண்ணிக்கை விபரங்கள் எந்தக் கிறிஸ்தவனுக்கும் உற்சாகமளிக்கக் கூடியவை. ஆனால், அதனால் உருவாக்கப்படும், மனம் மாறியவர்களாகக் கருதப்படுபவர்களை ஆராய்ந்து பார்க்கும்போதே அதன் சுயரூபம் வெளிப்படும். இதயத்தைப் பிளக்கும் ஒரு அனுபவத்தைப் பற்றிக் கூறுவதானால், ஒரு கூட்டத்தில் மனம் மாறியவர்களென அறிவிக்கப்பட்ட நாற்பது பேரை ஆராய்ந்து பார்த்தபோது அவர்களில் ஒருவரே கிறிஸ்தவன் என்று அறிவிக்கக் கூடியவராக இருந்தார். ஒருவர் கிறிஸ்தவராக மாறியிருக்கலாம் ஆனால் மற்ற நாற்பது பேருடைய கதி என்னாவது? அவர்களில் சிலர் உண்மையில் எந்தவித மனமாற்றத்தையும் அடையாமல் தாங்கள் எடுத்த தீர்மானத்தின் மூலம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டிருப்பதாகத் தவறாக எண்ணத்தைக் கொண்டிருக்கலாம். வேறு சிலர், தமது தீர்மானத்தின் மூலம் கிறிஸ்தவம் அளிக்கக்கூடிய அனைத்தையுமே அடைந்துவிட்டதாக நம்பிக் கொண்டிருக்கலாம். இவர்கள், கிறிஸ்தவம் தம்மில் ஏற்படுத்தும் என்று நம்பியிருந்த மனமாற்றத்தை அடையாமலும், அதனைப் பார்க்க முடியாமலும் மனம் கலங்கி, கிறிஸ்தவம் போலியானது என்ற முடிவுக்கு வந்து, கிறிஸ்தவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள் அல்லது மகா மோசமான பொய்யர்கள் என்று அவர்களைக் கருதலாம்.

தீர்மானம் எடுக்கும்படித் தூண்டப்பட்டு மனங்கலங்கிப்போனவர்களின் அனுபவங்களை ஆராய்ந்து பல தெளிவான உண்மைகளை வெளிப் படுத்தியுள்ளார் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பிரபல பிரசங்கியான ரொபட் டெப்னி. அவர் கூறுவதாவது:

> கிறிஸ்தவ பிரசங்கிகளும், கிறிஸ்தவத்தின் நண்பர்களும் தங்களுடைய அனுபவமின்மையைப் பயன்படுத்தி மிகவும் மோசமாகத் தம்மை ஏமாற்றிவிட்டதாக இவர்கள் எண்ணுகிறார் கள். தங்களுடைய குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்தி, தங்களால் புரிந்து கொள்ள முடியாததும், செயல்படுத்த முடியாததுமான காரியங்களைச் செய்யவைத்து, பரிசுத்தமான நிலையை உதறித்தள்ள வைத்துள்ளனர் என்று நம்புகிறார்கள். கிறிஸ்தவத்தையும் அதனைப் போதிப்பவர்களையும் இவர்கள் சந்தேகத்துடன் பார்த்து ஆத்திரமடைவதில் எந்தவிதமான ஆச்சரியமுமில்லை. ஆரம்பத்தில் இவர்கள் உண்மையிலேயே ஆன்மீகக் காரியங்களில் ஆர்வம் கொண்டிருந்த போதும் இவர்களடைந்துள்ள மோசமான அனுபவங்கள் மறுபிறப்பையும் அனுபவபூர்வமான கிறிஸ்தவத்தையும் ஒரு மாயை என இவர்களை எண்ண வைத்துள்ளது. ஆகவே, மற்றவர்களுடைய அனுபவங்களையும் இவர்கள் ஒரு மாயையாகக் கருதுவது இயற்கையே. இவர்கள் சொல்லவதென்னவெனில்: "எமக்கும் இந்தக் கிறிஸ்தவர்களுக்குமுள்ள வேறுபாடு என்னவெனில் நாம் உணர்ந்ததைப்போல அவர்கள் தங்களுடைய மாயையை இன்னும் உணரவில்லை. நாங்கள் அந்நிலையில் இருந்தபோது கொண்டிருந்ததைவிட மேலான ஒரு நம்பிக்கையை அவர்கள் தங்களுடைய நிலையில் கொண்டிருக்கவில்லை. எங்களுடைய வாழ்க்கையில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை என்பது எமக்குத் தெரியும், அதேபோல் அவர்களுடைய வாழக்கையிலும் எந்தவிதமான மாற்றமும் ஏற்பட்டுள்ளதாக நாங்கள் கருதவில்லை." இவ்விதமான ஆபத்தான எண்ணங்களை அனுபவிக்கும் நிலையை ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் வாழ்க்கையில் கடந்துள்ளனர். தங்களுடைய வாழ்க்கையில் போலித்தனமானதொரு ஆன்மீக அனுபவத்தை அடைந்துள்ள அவிசுவாசிகளினால் இன்று நாடு முழுவதுமே நிரம்பி வழிகிறது. கிறிஸ்தவம் என்ற பெயரில் இன்று போலித்தனமே எக்காளமெழுப்புவதால் சத்தியம் ஏற்படுத்தும் இரட்சிப்பின் அனுபவத்தை இழந்தவர்கள் இவர்கள் மட்டுமல்ல.[6]

இன்று திறமையாக வியாபாரத் தோனியில் நடத்தப்படும் பெரும் சுவிஷேசக் கூட்டங்கள் தோன்றுவதற்கு முன்பே, நூறு வருடங்களுக்கு முன்பு ரொபட் டெப்னி இவ்வார்த்தைகளை எழுதினார். நூறு வருடங்களுக்கு முன்பே உலகில் பல நாடுகளில் போலித்தனமான ஆன்மீக அனுபவத்தை அடைந்த அவிசுவாசிகள் நிரம்பி வழிந்துள்ளனர் என்றால் இன்றைய நிலைமை என்ன? ஒவ்வொரு கிறிஸ்தவனும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய மிக முக்கியமான கேள்வி இது. மனிதர்களுக்கு தவறான நம்பிக்கையை அளித்து, அவர்களைத் தவறான பாதையில் வழி நடத்துவதை ஒரு கிறிஸ்தவன் உண்மையுடன் செய்தாலும்கூட, அவன் மகாவல்லமையுள்ள கர்த்தருக்கு முன் தோன்றும்போது அவரது கடுங்கோபத்தைச் சந்திக்க நேரிடும்.

## தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பும் அர்ப்பண அழைப்பும் (Altar Call)

*சபை வரலாற்றில் ஆயிரக்கணக்கான பக்கங்களை வாசித்தாலும் கடந்த நூற்றாண்டிற்கு முன்பு பழம் பஞ்சாங்கமான அர்ப்பண அழைப்பு இருந்ததை நாம் பார்க்க முடியாது. சார்ள்ஸ் பினியின் (1792-1875) காலத்திற்கு முன்பு இத்தகைய அர்ப்பண அழைப்பு முறை நடைமுறையில் காணப்படவில்லை என்பதை வரலாற்றில் படித்தறியும்போது பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே சார்ள்ஸ் பினி கூட்ட முடிவில் ஆண்களையும், பெண்களையும் கூட்டத்திற்கு முன்னால் வந்து சரீரப்பிரகாரமாக தீர்மானம் எடுக்கும் முறையை ஆரம்பித்து வந்தார். அக்காலத்தில் அமெரிக்காவின் பிரின்ஸ்டன் இறையியல் கல்லூரியில் இறையியல் பேராசிரியராக இருந்த டாக்டர் அலபர்ட் பி. டொட் பினியின் இப்புதுவிதமான அழைப்புவிடுக்கும் முறை சபை வரலாறு காணாததொன்று என்று எடுத்துக் காட்டியுள்ளார். பினியின் “எழுப்புதல் பற்றிய விரிவுரைகள்” என்ற நூலுக்கு எழுதிய விமர்சனத்தில் பேராசிரியர் டொட், “சபை வரலாற்றைத் தலைகீழாகப் புரட்டிப் படித்தாலும் 1820 ஆம் ஆண்டிற்கு முன்பு இத்தகைய அழைப்புக் கொடுக்கும் முறை இருந்ததாக ஒருவருமே பார்க்க முடியாது” என்று கூறியுள்ளார். இதற்கு மாறாக, நற்செய்தி பிரசங்கிக்கப்பட்ட ஒவ்வொருமுறையும் மனிதர்கள் கிறிஸ்துவிடம் வருமாறு மட்டுமே அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று வரலாறு காட்டுகின்றதே தவிர கூட்டத்தின் முடிவில் உடனடியாக சரீரபூர்வமாக அவர்கள் தீர்மானம் எடுக்கும்படியாகக் கட்டாயப்படுத்தப்பட்டதாகப் போதிக்கவில்லை.*

*அப்போஸ்தலரான பவுல் தன் வாழ்க்கையிலேயே கேள்விப்பட்டிராத இத்தகைய அர்ப்பண அழைப்பை சுவிஷேச சபைகளின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இன்று பலர் கருதுகின்றனர். உண்மையில் இத்தகைய அழைப்பைக் கொடுக்காத சபைகள் சுவிஷேச ஊழியத்தில் அக்கறை காட்டுவதில்லை என்று குற்றம் சாட்டப்படுகின்றன. பவுலோ, பேதுருவோ தங்களுடைய பிரசங்கத்தின் இறுதியில், கர்த்தரின் வழியில் நடக்கத் தீர்மானம் எடுத்தேயாக வேண்டும் என்று மக்களைக் கட்டாயப்படுத்தவில்லை. சபை வரலாற்றில் மட்டுமல்லாமல் வேத வரலாற்றிலும் காணமுடியாததொன்றாக இந்நவீன அழைப்புமுறை காணப்படுகின்றது.*

“நற்செய்திப் பிரசங்கிகள் கடந்த ஆயிரத்தி எண்ணூறு வருடங்களாக இவ்வர்ப்பண அழைப்பு முறையில்லாமல் எவ்வாறு மக்களைக் கிறிஸ்துவிடம் வருமாறு அழைத்தார்கள்?” என்று ஒருவர் கேட்கக்கூடும். ஆரம்பகால சபையினரும், அப்போஸ்தலரும் எதைச் செய்தார்களோ அதேமுறையிலேயே அவர்கள் மக்களைக் கிறிஸ்துவிடம் வருமாறு அழைத்துள்ளனர். அவர்களுடைய பிரசங்கங்கள் அனைத்தும் எல்லா மனிதர்களும் எல்லா இடங்களிலிருந்தும் கிறிஸ்துவிடம் வருமாறு அழைக்கும் அழைப்புகளால் நிரம்பி வழிந்துள்ளன.

கிறிஸ்தவ சபையினால் கொடுக்கப்பட்ட முதல் பிரசங்கம் அர்ப்பண அழைப் பைக் கொண்டிருக்கவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். பேதுரு பெந்தகொஸ்தே நாளில் இத்தகைய அழைப்பை விடுக்கவில்லை. அப்போஸ்தர் நடபடிகளில் நாம் வாசிக்கும் செயல் எந்தவொரு உணர்ச்சி களைத் தூண்டும் மனித முயற்சிகளாலோ அல்லது புத்திசாலித்தனமான “அழைப்பாலோ” ஏற்படாமல் பரிசுத்த ஆவியின் செயலால் ஏற்பட்டது.

**“தீர்மானம் எடுத்தல்” என்ற வார்த்தை எப்போதுமே எனக்கு சரியானதாகப் படவில்லை. இவ்வார்த்தையை அடிக்கடி மற்றவர்கள் பயன்படுத்தும்போது அது எனக்கு வருத்தத்தையே அளிக்கிறது. அவர்கள் இதனை அறிவீனத்தாலும், நல்ல நோக்கங்களுடனுமே படன்படுத்தி யுள்ளனர். ஒரு பாவி எப்போதுமே கிறுஸ்துவுக்காகத் “தீர்மானம்” எடுக்க முடியாது; ஆனால் அவன் ஆதரவற்றவனாக, உதவியற்றவனாக, கிறுஸ்துவிடம் அவரது கிருபையை நாடிப் பறந்தோட வேண்டும். இதைவிட வேறெதுவுமே திருப்பிகரமான தில்லை.**

*- மார்டின் லாயிட் ஜோன்ஸ் ( பிரசங்கிகளும், பிரசங்கமும் என்ற நூலில் இருந்து )*

அந்நாளில் மூவாயிரம் பேர் மனந்திரும்பியதை அப்போஸ்தலர்கள் பார்த்தனர்.

மாபெரும் பிரசங்கியான ஸ்பர்ஜன் கிறிஸ்துவிடம் வருமாறு மனிதர்களுக்கு அழைப்புக் கொடுத்தாரே தவிர கூட்டங்களில் முன்னால் வந்து தீர்மானம் எடுக்கும்படி என்றுமே அழைத்ததில்லை. அவர் மக்களைக் கிறிஸ்துவிடம் வருமாறு விடுத்த அழைப்பைக் கேட்போம்:

> இந்த இடத்தைவிட்டு நீங்கள் போகுமுன் கடவுளிடம் உருக்கமாக பின்வருமாறு ஜெபியுங்கள்: "கர்த்தாவே! பாவியான என்னிடம் கருணை காட்டும். ஆண்டவரே! நான் இரட்சிக்கப்பட வேண்டும். என்னை இரட்சியும். உமது நாமத்தை நோக்கி நான் கூப்பிடுகிறேன். ஆண்டவரே! நான் குற்ற முள்ளவன், என்மீதுள்ள உமது கோபம் நியாயமானது. ஆண்டவரே! என்னை என்னால் இரட்சித்துக் கொள்ள முடியாது. எனக்குள் ஒரு புதிய இருதயத்தையும், ஆவியையும் ஏற்படுத்திக் கொள்ள இயலாதவனாக இருக்கிறேன். உமது சித்தத்தை நான் கடைப்பிடிக்கும் படியாக நீர் எனக்குள் வந்து என்னை மாற்றும். என்னை மாற்றக்கூடிய வல்லமை உமக்கு மட்டுமே உண்டு. உம்மைவிட்டு விலகியோடினால் நான் எங்கே போவேன்?
>
> ஆனால், நான் முழு இருதயத்தோடும் இப்போது உம்மை அழைக்கிறேன். ஆண்டவரே! நடுக்கத்தோடு, ஆனால் விசுவாசத்தோடு உமது கரத்தில் நான் என்னை ஒப்படைக்கிறேன். உம்முடைய அன்பான குமாரனின் நீதிமானாக்கும் பரிசுத்த இரத்தத்தை நான் விசுவாசிக்கிறேன். ஆண்டவரே, இந்த இரவிலேயே என்னை இரட்சியும்." என்று ஜெபியுங்கள். அதன்பின் கிறிஸ்துவை விசுவாசித்து உங்கள் வீட்டிற்குத் திரும்புங்கள். "இல்லை, நான் ஆலோசனை-அறைக்குள் போக விரும்புகிறேன்" என்று கூறுவீர்களானால், அது உங்களுக்குத் தேவையில்லை. அந்த அறைகளுக்குள் மனிதர்களுக்கு போலியான நமபிக்கையே அளிக்கப்படுகிறது. அதற்குள் போன மிகச்சிலரே உண்மையான கிறிஸ்தவர்களாக திரும்பி வந்துள்ளனர். உங்களுடைய தேவனிடத்தில் போங்கள், இப்போதே இருக்குமிடத்திலேயே கிறிஸ்துவிடத்தில் உங்களை ஒப்புக் கொடுங்கள்.


(18 ஆம் பக்கம் பார்க்க)

## சுருக்கமாக....!

வேதம் கர்த்தர் தனது வார்த்தையின் மூலம் கொடுக்கும் சுவிஷேச அழைப்பைப்பற்றித் தெளிவாகப் போதிக்கிறது. இவ்வழைப்பு பிரசங்கத்தின் மூலம் எல்லா மனிதர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்பதை வரலாற்று கிறிஸ்தவம் என்றுமே மறுத்ததில்லை. வரலாற்றில் உருவான எல்லா விசுவாச அறிக்கைகளும் இதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. வரலாறு பெற்றெடுத்த பெரும் பிரசங்கிகளான எட்வர்ட்ஸ், விட்பீல்ட், ஸ்பர்ஜன் போன்றோர் இதன் அடிப்படையில் பிரசங்கித்து சுவிஷேச அழைப்பைக் கொடுத்துள்ளனர். ஆனால், வேதம் எங்குமே இவ்வழைப்பைக் கொடுப்பதற்கு மேலாக வேறு எதையும் செய்யும்படிப் போதிக்கவில்லை. நவீன சுவிஷேச "அர்ப்பண அழைப்பு", <u>இவ்வழைப்பை மட்டும் கொடுக்காமல்</u>, அதை மீறிப் பிரசங்கம் கேட்போர் கூட்ட இறுதியில் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளக் <u>கட்டாயத் தீர்மானம் எடுக்கும்படி</u> வற்புறுத்துகிறது. இவ்வாறு தீர்மானம் எடுத்த அனைவரும் இரட்சிப்பை அந்த இடத்திலேயே அடைந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறார்கள். இத்தகைய செயலுக்கு வேதத்தில் எந்த ஆதாரமுமில்லை. சிலர், இவ்வாறு செய்வதன் மூலம் பாவிகளுக்கு உதவி செய்கிறோம்; அதில் தப்பில்லை என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இரட்சிப்பைக் கர்த்தர் இலவசமாக மனந்திரும்புபவர்களுக்குக் கொடுக்கிறார். பாவிகளுக்கு இதில் நாமெப்படி உதவி செய்ய முடியும்? பாவிகள் நமது உதவி இல்லாமல் இரட்சிப்பை அடைய முடியாது என்ற போதனையைத்தான் ரோமன் கத்தோலிக்க சமயம் தொடர்ந்து போதித்து வருகிறது. சுவிஷேச கிறிஸ்தவம் இதற்கு மாறாக இரட்சிப்பை தேவ கிருபையால் விசுவாசத்தின் மூலம் மட்டுமே அடைய முடியும் என்று போதிக்கின்றது. ஆகவே, பாவிகளுக்கு நற் செய்தியைப் போதிப்பது மட்டுமே நமது கடமை. அதற்கு மேலாக எதையும் செய்ய முயற்சிப்பது ரோமன் கத்தோலிக்க, பெலேஜியனிச, ஆர்மீனியக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்கு சமமாகும்.

"பினியின் மாறுபாடான கொள்கைகள் எனக்கு ஏற்புடையவையல்ல" -
*ஸி. எச். ஸ்பர்ஜன்-*

# சார்ள்ஸ் பினி



சார்ள்ஸ் பினி

திருச்சபை வரலாற்றில் சார்ள்ஸ் பினி ஒரு முக்கியமான மனிதர். அவரால் வசீகரிக்கப்பட்டவர்களில் சிலர் அவரை அமெரிக்காவின் மிகப்பெரிய எழுப்புதல் விற்பனராகக் கருதுகின்றனர். பினியின் பெலேஜியனிச இறையியற் கோட்பாடுகளையும், சுவிஷேச அழைப்பு முறைகளையும் ஆய்ந்துணர்ந்தவர்கள் அவரை சுவிஷேச உலகை சந்ததி சந்ததியாகப் பாதித்துவரும் மனிதராகக் கருதுகின்றனர்.

பிரஸ்பிடீரியன் சமயக்குழுவினால் பினி பிரசங்கியாக நியமிக்கப்பட்டபோதும் அச் சமயக்குழு விசுவாசித்த வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையை பினி எப்போதுமே ஏற்றுக் கொள்ளவில்லை. 1838 நியூயோர்க் மாகாணத்தில் நடந்த ஒரு கூட்டத்தின் மூலமே பினி பெரும் புகழடையத் தொடங்கினார். எல்லா சபைகளினதும் ஆதரவையும் அன்று முதல் பெற்ற பினி தனது சுவிஷேசக் கூட்டங்களில் மக்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர "சலனமுற்றவர்களின் இருக்கை" (Anxious Bench) என்ற முறையைக் கையாளத் தொடங்கினார். ஒபர்லின் புதுக் கல்லூரியில் பின்பு பேராசிரியராக பதவியேற்ற பினி அந்நகரிலேயே ஒரு சபைப் போதகராகவும் பொறுப்பேற்றார். பினி அநேக சுவிஷேசக் கூட்டங்களை அமெரிக்காவில் நடத்தியதோடு இரண்டு முறை இங்கிலாந்துக்கும் விஜயம் செய்துள்ளார்.

பினியின் காலத்தில் பிரசங்கியாகவிருந்த அசேல் நெட்டில்டன் பினியின் சுவிஷேச அழைப்பு முறைகளைப் பெரிதும் கண்டித்துள்ளார். வரலாற்று கிறிஸ்தவத்திற்கு எதிரான முறையில் சுவிஷேசக்கூட்டங்களில் அழைப்புக் கொடுத்து கிறிஸ்தவத்தைத் திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்ட பினி உண்மையில் விசுவாசித்து என்ன என்பதை ஆராய்ந்தால் அவரது போக்கின் காரணத்தைப் புரிந்து கொள்ளலாம்.

1. பினி சீர்திருத்தக் கோட்பாடுகளை முற்றிலும் வெறுத்தார். வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையை அவர் துளியும் வாசிக்காததோடு அதை முற்றாக நிராகரித்தார்.

2. பினி மனிதனின் மூல பாவத்தை அடியோடு நம்பவில்லை.

3. கிறிஸ்துவின் நீதி, அவரை விசுவாசிப்பவர்களின் கணக்கில் வைக்கப்படுவதையும் பினி நம்பவில்லை.

4. சரியான முறைகளை மட்டும் பயன்படுத்தி ஒருவரில் மனமாற்றத்தை நிச்சயமாக ஏற்படுத்த முடியும் என்று பினி விசுவாசித்தார்.


5. மனிதன் இயற்கையாகவே மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கும் வல்லமையைக் கொண்டுள்ளான் என்று பினி விசுவாசித்தார்.

6. ஒருவர் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்க பரிசுத்த ஆவியின் எந்தவித உந்துதலோ, செல்வாக்கோ அவசியம் இல்லை என்பது பினியின் போதனை.

7. கார்டினர் ஸ்பிரிங் என்ற கடந்த நூற்றாண்டைச் சேர்ந்த அமெரிக்கப் பிரசங்கி பினியின் விசுவாச ஜெபத்தை வேதத்திற்குப் புறம்பானதெனக் கூறியுள்ளார். கடவுள் தனது வார்த்தைக்குக் கட்டுப்பட்டவராக இருப்பதால் நாம் விசுவாசித்துக் கேட்பதை அவர் கொடுத்தேயாக வேண்டும் என்று பினி கருதினார். இத்தகைய குருட்டு விசுவாசம் கடவுளின் நோக்கங்களையும் செயல் திட்டங்களையும் நினைவில் கொள்ள மறுக்கிறது. (இத்தகைய விசுவாச ஜெபத்தையே யொங்கி சோவும் இன்று போதிக்கிறார் என்பதை மறுக்க முடியாது).

8. புதிய விசுவாசிகளை உடனடியாக அவர்கள் தீர்மானம் எடுத்த உடனேயே அறிந்து கொள்ள முடியும் என்று பினி போதித்தார். இது வேதத்திற்கு முரணான போதனை. வெறும் உணர்ச்சி வசப்பட்டு கூட்டங்களில் தீர்மானம் எடுத்தவர்களெல்லாம் கிறிஸ்தவர்கள் என்று பினி கருதினார்.

பினியின் தவறான, தீங்குவிளைவிக்கும் இறையியற் கோட்பாடுகளே அவரது வேத ஆதாரமற்ற செயல்களுக்குக் காரணம்.



சார்ள்ஸ் பினி

**(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

*இவ்வாறாகக் கூட்டத்திற்கு முன்பாக அல்லாமல் கிறிஸ்துவிடம் வருமாறு மக்களை அழைத்த ஸ்பர்ஜனின் சுவிஷேச அழைப்பைப்போன்ற அழைப்புகள் இன்று அவசியம். இவ்வாறே ஜோர்ஜ் விட்பீல்டும் மக்களைப் கூட்டத்திற்கு முன்னால் அல்லாமல் கிறிஸ்துவிடம் மட்டுமே வருமாறு தனது பிரசங்கங்களின் மூலமாக அழைத்துள்ளார். வேதபூர்வமான முறைகளை மட்டுமே பயன்படுத்தி பிரசங்கத்தின் மூலம் மக்களைக் கிறிஸ்துவிடம் வருமாறு அழைத்து அனேக ஆத்துமாக்களைக் கர்த்தருக்காக ஆதாயப்படுத்திக் கொண்ட ஜொனத்தன் எட்வர்ட்ஸ், மற்றும் சீர்திருத்தவாதிகளும், ஏனையோரும் இம் முறையை மட்டுமே கையாண்டுள்ளனர்.*

*இன்று சுவிஷேச கூட்டங்களில் அர்ப்பண அழைப்பே அதி முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பதோடு கூட்டத்தின் உச்சகட்ட நிகழ்ச்சியாகவும் உள்ளது. இசைப்பிரவாகத்தின் தாலாட்டோடு பாடப்படும் பலவிதமான பாடல்களின் மத்தியில் மக்களைக் கூட்டத்தின் முன்னால் வரும்படி அழைப்புகளைக் கொடுத்து, அவ்வாறு முன்னால் வரும்படிக் காலடி எடுத்து வைக்கும் செயலிலேயே அவர்களுடைய நித்திய வாழ்விற்கான அனைத்தும் தங்கியிருக்கின்றது என்ற எண்ணத்தையும் அவர்களுடைய உள்ளத்தில் ஆழமாகப்பதிய வைக்கின்றனர். இன்று அனேக சுவிஷேச கூட்டங்களில் அர்ப்பண அழைப்பைக் கொடுக்கும்போது பாடப்படும், சார்ளட் எலியட்டினால் 1836 இல் எழுதப்பட்ட அருமையான பாடலான:*

*நான் பாவிதான், ஆனாலும் நீர்*
*மாசற்ற இரத்தஞ் சிந்தினீர்;*
*வா என்று என்னைக் கூப்பிட்டீர்*
*என் மீட்பரே! வந்தேன்.*

*என்ற பாடலின் இறுதி வரியான என் மீட்பரே வந்தேன் என்ற வரி மக்களை சுவிஷேசக் கூட்டத்தின் முன்னால் வரும்படி அழைப்பதற்காக இன்று அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பாடலாசிரியரான சார்ளட் எலியட் அதை எழுதியபோது முக்கியமாக ஊனமுற்றவர்களை மனதில் கொண்டே எழுதினார். இப்பாடல் ஊனமுற்றவர்களுக்காக எழுதப்பட்ட பாடல் புத்தகத்திலேயே முதன் முதலில் இடம் பெற்றது.[9] ஆகவே செல்வி சார்ளட் எலியட்டைப் பொறுத்தவரையில் கிறிஸ்துவிடம் வருவதென்பது சுவிஷேசக் கூட்டத்தின் முன்னால் தீர்மானம் எடுப்பதற்காக நடந்து வருவதல்ல.*

*அர்ப்பண அழைப்பு விடுக்கும் அநேகர் தீர்மானம் எடுப்பதற்காக கூட்டத்தின் முன்னால் ஒருவர் நடந்து வருவதையும், அதே மனிதர் கிறிஸ்துவிடம் வருவதையும் ஒன்றாகக் கருதுவதில்லை. அதேவேளை, சுவிஷேசக் கூட்டத்தில் கொடுக்கப்படும் அர்ப்பண அழைப்பையேற்று கூட்டத்தின் முன்னால் நடந்து வருவதே பாவிகள் கிறிஸ்துவிடம் வருவதற்கான முதல்படி என்ற எண்ணத்தையும் அவர்கள் மத்தியில் ஏற்படுத்த அவர்கள் தவறுவதில்லை. இதை எந்தவிதத்திலும் தவறாக விளங்கிக் கொள்ளக்கூடாதென்பதில் நான் மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறேன். அத்தொடு, எனக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்தே எல்லா சுவிஷேசக் கூட்டங்களிலும் இப்பலிபீட அழைப்பு முறை பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதால் இதனைக் கையாளுபவர்களின் நேர்மையான நோக்கத்தையும் நான் புரிந்து வைத்திருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், இவ்வர்ப்பண அழைப்பைக் கொடுக்காத சுவிஷேசக் கிறிஸ்தவம் எப்போதும் இருந்துள்ளது என்ற உண்மை தெரியாமலேயே நான் ஒரு கிறிஸ்தவக் கூட்டத்தின் மத்தியில் வளர்ந்து வந்துள்ளேன். இக்காலங்களில் நான் பங்கு பற்றியுள்ள சுவிஷேசக் கூட்டங்களில் என் மனம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலும், அவரது கல்வாரித் துன்பங்களிலும் பதிந்திருந்த வேளைகளில் அவற்றையெல்லாம் முற்றாகத் துடைத்தெறிவதுபோல் கூட்ட நடவடிக்கைகள் கிறிஸ்துவின் மரண துன்பத்தையும், மகிமையையும் எடுத்துக் காட்டுவதை விடுத்து அர்ப்பண அழைப்பிற்கே முக்கியத்துவம் கொடுத்தன. மேலும் பலர் இதே அனுபவங்களை இக்கூட்டங்களில் அடைந்துள்ளனர். அர்ப்பண அழைப்பு, கூட்ட முடிவில் கொடுக்கப்படும் பலவிதமான அழைப்புகள், கூட்டத்தின் முகப்பை நோக்கி நடப்பதா? இல்லையா? என்ற தடுமாற்றம், எத்தனை பேர் இவ்வாறு முன்னால் போகப்போகிறார்கள் என்ற ஆதங்கம் ஆகியவை, கிறிஸ்துவை நாடிக்*

**நற்செய்தியின் துல்லியமான செய்தியை அவிசுவாசிகளின் குருட்டுத்தனத்தால் மறைத்துவிட முடியாது; குருடர்களால் பார்த்து அறிய முடியாதென்பதால் சூரிய ஒளி மங்கலானது என்று அர்த்தமல்ல.**

***- ஜோன் கல்வின்***

*கர்த்தரை உண்மையோடும், ஆவியோடு துதிப்பதிலிருந்து பலரை விரட்டி அடித்திருக்கின்றன.*

*கடுமையான போதனைகளைக் கிறிஸ்து போதிக்கத் தொடங்கும்வரை எங்கும் அவரைப் பின்பற்றிப் போய்க்கொண்டிருந்த கூட்டத்தாரை உங்களுக்கு நினைவிருக்கிறதா? அதன் பின் அந்தக்கூட்டம் அவரைப் பின்பற்றுவதை முற்றாக நிறுத்தியது (யோவான் 6:66). ஏன்? அவர்கள் தங்கள் காலடிகளை எடுத்துவைத்து அவரைப் பின்பற்றவில்லையா? நிச்சயமாக, ஆனால், இத்தகைய பின்பற்றுதல் அல்ல, அவர்களுக்கு இரட்சிப்பைத் தேடித் தருவது. கிறிஸ்து சொன்னார், பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37). அவர் தொடர்ந்து சொன்னார், "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் அவனை நான் எழுப்புவேன்" (யோவான் 6:44). இந்த இரண்டு வேதப்பகுதிகளிலும் இயேசு ஒருவர் சரீரப்பிரகாரமாக தன்னிடம் நடந்து வருவதைக் குறித்துப் பேசவில்லை.*

*கூட்டத்தில் தீர்மானம் எடுப்பதற்காக முன்னால் நடந்து வருவதல்ல, வாழ்வுக்கும், மரணத்திற்குமாக அவரிடம் நம்மை முழுதாக ஒப்புக் கொடுப்பதே கிறிஸ்துவிடம் வருவதென்ற உண்மையை இன்று எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் கிறிஸ்துவை அறிந்து கொள்வதற்கு சபைகள் வேதபூர்வமான வழிமுறைகளைக் கடைப்பிடிக்க கர்த்தர் அவர்களை வழிநடத்துவாராக. பாவிகளைக் கூட்டத்தின் முன்னால் தீர்மானம் எடுப்பதற்கல்ல, ஆண்டவராகிய கிறிஸ்துவிடம் வருமாறு நாம் உறுதியாக அழைக்க வேண்டும்.*

## தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பும் பிரசங்கமும்

*தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு எனும் இப்போலிப்போதனை பிரசங்கத்தின் வடிவத்தையும் இன்று பெரிதும் மோசமாகப் பாதித்துள்ளது. இன்று பலராலும் அமெரிக்காவில் பாராட்டப்படும் ஜெக் ஹைல்ஸ் எனும் பிரசங்கி தனது சக பிரசங்கிகளுக்கு பின்வரும் ஆலோசனையை வழங்குகிறார்.*

> நம்மில் பலர் நமது பிரசங்கத்தின் முடிவில், இறுதியாக அல்லது முடிவாக நான் சொல்லவிரும்புவது என்வென்றால் என்று கூறுவது வழக்கம். ஆனால் இத்தகைய வாக்கியங்கள் மிகவும் ஆபத்தானவை. நமது பிரசங்கம் இன்னும் ஐந்து நிமிடத்தில் முடிந்து விடப் போகிறது என்று தெரிந்த ஆத்துமா நாம் கொடுக்கப்போகும் அழைப்பை ஏற்றுக் கொள்ளாதிருக்க தன்னைத் தயார் படுத்திக் கொள்கிறது. நாம் அறைகுறையாக நமது பிரசங்கத்தை முடித்தால், நாம் பிரசங்கத்தை முடிக்கப் போகிறோம் என்பதை சந்தேகிக்கவியலாத ஆத்துமா அழைப்பிற்காகத் தன்னைத் தயார் செய்து கொள்ள நேரம் இல்லாமல் போகிறது. ஆகவே இவ்வழைப்பு மூலம் பலரையும் தேவனிடத்தில் கொண்டு வரலாம்.[10]

*ஜெக் ஹைல்ஸின் இவ்வார்த்தைகளை முதன் முறையாக வாசிக்கும்போது நாம் தான் அதன் பொருளை சரிவரப்புரிந்து கொள்ளவில்லை போலிருக்கிறது ஒன்று ஒருவர் எண்ணிவிடலாம். ஆனால் இரண்டு மூன்று தடவைகள் அதை வாசித்துப் பார்க்கும்போதுதான் ஜெக் ஹைல்ஸ் உண்மையில், ஒரு பிரசங்கி தனது புத்திசாலித்தனத்தால், பிரசங்க இறுதியில் செய்யும் சில காரியங்களால் ஆத்துமாக்களைக் கர்த்தரிடத்தில் கொண்டு வந்துவிடலாம் என்று போதிப்பதை அறிந்து கொள்ளலாம். அத்தோடு, ஒருவரது நித்திய வாழ்வை ஒருகணப் பொழுதில், கூட்ட முடிவில் தீர்மானித்து விடலாம் என்றும் அவர் போதிப்பதையும் புரிந்து கொள்ளலாம். ஆத்துமாக்களை, சடுதியாகக் கூட்ட முடிவில் தீர்மானம் எடுக்க வைப்பதற்காக அலையும் இத்தகைய பிரசங்கங்கள் அவர்களுக்கு ஒரு போலிச்சமயத்தை அறிமுகப்படுத்தமுடியுமே தவிர கிறிஸ்துவை அறியத்தரமுடியாது. நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் அல்லாது வேறு எதனிடமோ ஆத்துமாக்களை அழைத்துச் செல்ல முயலும் பிரசங்கத்தை விட மோசமான தொன்றிருக்க முடியுமா?*



அசேல் நெட்டில்டன்
1783-1843

தனது பிரசங்கங்களின் மூலம் பினியின் சுவிஷேச அழைப்பு முறைகளாலும், போதனைகளாலும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை வெளிப்படுத்திய தேவ ஊழியர். பினி வாழ்ந்த காலத்தில் அற்புதமாகக் கர்த்தரால் ஊழியத்தில் பயன்படுத்தப்பட்டவர்.

பிரசங்கம் என்பது மனிதன் தனது புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்திக் கண்டு பிடித்த ஒரு சாதனமல்ல. ஆனால் அது ஆவியின் வல்லமையால் பிரசங்கிக்கப் படும் சத்தியமாகும். ஜொனத்தன் எட்வர்ட்ஸின் சபையில் ஜோர்ஜ் விட்பீல்ட் பிரசங்கித்ததை வர்ணித்து, பிரசங்கம் என்றால் என்ன? என்பதற்கு மார்ட்டின் லொயிட் ஜோன்ஸ் கொடுத்த விளக்கத்தை என்னால் என்றுமே மறக்க முடியாது.

> ஜொனத்தன் எட்வர்ட்ஸிடம் இருந்ததைப் போலத் திறமைகள் பலவற்றைக் கொண்டிராத ஜோர்ஜ் விட்பீல்டினுடைய பிரசங்கத்தை எட்வர்ட்ஸ் கேட்டுக் கொண்டிருந்தார். விட்பீல்டினுடைய பிரசங்கத்தை அவர் கேட்டுக் கொண்டிருந்தபோது அவரது முகம் பிரகாசித்ததாக விட்பீல்ட் கூறுகின்றார். அத்தோடு பிரகாசித்த அவரது முகத்திலிருந்து கண்ணீர் பெரு வெள்ளமாகப் பெருக்கெடுத்தோடியது. ஏனெனில் எட்வர்ட்ஸ் விட்பீல்டின் பிரசங்கத்திலிருந்த உறுதியையும், அதிகாரத்தையும் புரிந்து கொண்டார். விட்பீல்ட் ஆவியில் இருந்தார். அதேவேளை எட்வர்ட்ஸும் ஆவியில் இருந்தார். அந்த இருவருமே ஆவியில் இணைந்திருந்தனர். அந்த சபை முழுவதும் பிரசங்கி உட்பட கர்த்தரின் கரத்தில் இருந்தனர். இதுவே பிரசங்கம். இத்தகைய பிரசங்கத்தை அனுபவத்தில் பெறவும், இவ்வாறு பிரசங்கிக்கவும் கர்த்தர் நமக்குத் துணை புரிவாராக.[11]

மார்ட்டின் லொயிட் ஜோன்ஸும், புதிய ஏற்பாடும் நமக்குக் காட்டித் தரும் இத்தகைய பிரசங்கம் இன்று நம்மத்தியில் காணப்படும் அனேக நவீன பிரசங்கங்களில் பயன்படுத்தப்படும் சூழ்ச்சிகளிலிருந்து மாறுபட்டது. வேத பூர்வமான பிரசங்கம் ஆத்துமாக்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினா லாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறக்கிறார் கள் என்று அறிவிக்கின்றது (யோவான் 1:13).

திருமுழுக்கின் மூலம் மறுபிறப்பு என்ற போதனை எவ்வாறு ஒருவரைக் கிறிஸ்துவிடத்தில் கொண்டு வர முடியாதோ அதேபோல் தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பும் ஒருவரைக்கிறிஸ்துவிடம் கொண்டுவர முடியாது. இத்தகைய பிரசங்கத்தைக் கேட்டுச் சிலர் கர்த்தரை அறிந்து கொண்டுள்ளார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் இத்தகைய போலித்தனமான பிரசங்கத்தால் அல்லாமல் அவற்றையும் மீறிச் செயல்பட்ட தேவ ஆவியின் மூலமே கர்த்தரிடத்தில் வந்துள்ளார்கள். ஆவியின் மூலமாக மட்டுமே எந்தவொரு ஆத்துமாவும் மறுபிறப்படைய முடியும் என்று வேதம் தெளிவாகப் போதிக்கின்றது. மறுபிறப்படையும்போதே ஆத்துமாக்கள் மனந்திரும்புதலையும், இரட்சிக்கும் விசுவாசத்தையும் அடைகிறார்களே தவிர அவற்றின் மூலமாக அவர்கள் மறுபிறப்படைவதில்லை. மனந்திரும்புதலும், விசுவாசமும் மறுபிறப் படைந்த மனிதனின் செயல்களே தவிர பாவத்தில் மரித்துள்ள ஆத்துமாக்களின் செயல்களல்ல (எபேசியர் 2:1, 5). இருப்பினும், கடவுள் நமக்காக விசிவாசிப்ப தில்லை. நிச்சயமாக அவர் நமக்காக மனந்திரும்பவும் முடியாது. ஏனெனில் அவர் மனந்திரும்பும்படியாக அவரில் எந்தப் பாவமும் காணப்படவில்லை. நாமே, தனிப்பட்ட முறையில், அறிவுபூர்வமாக, முழுமனத்தோடு நமது இரட்சிப்பிற்காக கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். அத்தோடு, பிரசங்கிகள் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி ஆத்துமாக்களை வற்புறுத்தக் கூடாதென்றும் நாம் கூறவில்லை. வெறுமனே சுவிஷேசத்தின் உண்மைகளை மட்டும் விளக்கிக் கூறிவிட்டு, பாவிகளை மன்னிக்கும் கிருபையுள்ள கிறிஸ்துவை மனந்திரும்பி விசுவாசிக்க வேண்டும் என்று ஆத்துமாக்களுக்கு அழைப்பு விடுக்காத பிரசங்கம் வேதபூர்வமான பிரசங்கமாக இருக்க முடியாது.

பைத்தியமாக உலகத்திற்குத் தோன்றுகிற பிரசங்கத்தின் மூலம் தன்னால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் கடவுள் இரட்சிக்கிறார் என்று அப்போஸ்தலர்கள் போதித்தனர். மனிதன் கண்டுபிடிக்கும் நவீன முறைகள் அனைத்தும் பாவிகளைக் கரை சேர்க்க தேவனால் நியமிக்கப்பட்டுள்ள வழி முறைகளை விட வல்லமையுள்ளவையாக இருக்க முடியாது. கர்த்தரைப் பலருக்கும் அறியத்தருவதற்கு தானெடுக்கும் எல்லா முயற்சிகளும் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமானால் திருச்சபைகள் உலகப்பிரகாரமான வழிகளைக்கைவிட்டு மறுபடியும் வேதபூர்வமான வழிமுறைகளைக் கையாள

**ஜீவனுள்ள தேவனுக்கெதிராக உயர்த்தப்படும் முஷ்டி மனித இதயத்தின் இயற்கையான தன்மையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.**

***- அல்பர்ட் என். மார்டின்***

வேண்டும். வேதபூர்வமான நற்செய்திப் பிரசங்கம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை பவுல் இவ்வாறாக விளக்குகிறார்: "நாங்களோ சிலுவையில் அறையப் பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்க ருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவ பலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார்" *(1 கொரி. 1:23-24).*

## தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பும் இறையியலும்

*வெளிப்படையாகத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் நற்செய்திக் கூட்டங்களில் பயன்படுத்தப்படும் அழைப்பு முறைகளுக்கு சில இறையியல் காரணிகள் உண்டு. வரலாற்று ரீதியான கிறிஸ்தவத்தை விட்டு விலகி இத்தகைய நவீன முறைகளைத் திருச்சபைகள் கையாளக் காரணமாகவிருந்த போதனைகள் யாவை?*

> *நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பொறுத்தவரையில் மறுபிறப்பு என்பது ஆவியானவரின் இறைமையுள்ள கிரியையால் மனிதனுடைய இருதயத்தில் ஏற்படும் மாற்றமாகும் (யோவான் 3:8). ஆனால் கிறிஸ்துவின் இப்போதனைக்கு எதிராக புதிய நற்செய்தி முறைகளுக்கு முன்னோடியாக விருந்தவர்களில் ஒருவர், "இறைவாழ்வு எப்போதுமே மனிதனுடைய கிரியை" என்று கூறியுள்ளார். இது ஒரு அதிர்ச்சி தரும் போதனையாகும். அதையும்விட இப்போதனை சார்ள்ஸ் பினியின் அதிக செல்வாக்குள்ள நூலான "இறைவாழ்வு பற்றிய எழுப்புதல்களின் விரிவுரைகள்" என்ற நூலின் முதல் பக்கத்தில் காணப் படுகின்றது.[12] மெய்யான இறைவாழ்வு மனிதனிலா அல்லது கடவுளிலா தங்கியுள்ளது என்ற கேள்விக்கான பதிலிலேயே நவீன நற்செய்தி ஊழியத்திற்கும் வேதபூர்வமான நற்செய்தி ஊழியத்திற்கும் இடையிலான பெரும் இறையியல் வித்தியாசம் காணப்படுகின்றது. தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு என்ற போதனை, மறுபிறப்பின் ஒருபாதிக்குக் காரணமாக மனிதனும், மறுபாதிக்குக் காரணமாகக் கடவுளும் இருப்பதாகப் போதிக்கின்றது.*


*இங்கிலாந்தின் சீர்திருத்த வரலாறு என்ற தனது நூலில் ஜே. எச். மெரில் ஓபின் (1794-1872) பினவருமாறு எழுதியுள்ளார்:*

*மனிதனின் வல்லமையாலேயே மறுபிறப்பு ஏற்படுகின்றது என்று போதிப்பதே ரோமன் கத்தோலிக்க மதத்தின் மிகப் பெரிய போலிப்போதனையாகும். இப்போலிப்போதனையின் மூலமே திருச்சபைக்கு அழிவும் வந்தது. கர்த்தரின் கிருபையாலேயே ஒருவர் மனந்திரும்ப முடியும். இதனை மனிதனுக்கும் கடவுளுக்குமிடையில் பங்கிடுவது பெலேஜியனிசத்தைவிடவும் மோசமான தாகும்.[13]*

*அமெரிக்காவின் மாபெரும் இறையியல் வல்லுனர்களில் ஒருவரான சார்ள்ஸ் ஹொட்ஜ் (1797-1878) இப்போதனையால் ஏற்படும் ஆபத்தைப் பின்வருமாறு விளக்குகிறார்:*

> *பாவிகள் தங்கள் பாவத்திலிருந்து தங்களைத் தாமே விடுவித்து மறுபிறப்பை அனுபவிக்க முடியும் என்றும், தமக்கு வசதியான வேளையில் மனந்திரும்பி விசுவாசிக்க முடியும் என்றும் போதிக்கும் போதனையைவிட மனித இருதயத்தைப் பாதிக்கும் மோசமான போதனை வேறெதுவும் இருக்க முடியாது. ஆவியால் புதுப்பிக்கப்படாத மனிதன் இரட்சிப்பை அடைவதற்கு சுயமாக எதையுமே செய்ய முடியாது என்பதை வேதமும், அனுபவமும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. ஆகவே அம்மனிதன் சத்தியத்தை அனுபவபூர்வமாக அறிந்து உணர வேண்டியது மிக மிக அவசியம். அவ்வாறு அநுபவத்தில் சத்தியத்தை அறிந்து கொண்டபின்பே அம்மனிதன் இரட்சிப்பை பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரே சாதனத்தை நாடிச் செல்வான். அதற்கு முன் அவனால் எதுவுமே செய்ய முடியாது.[14]*

*மேல் வரும் கூற்றுக்கள் இரண்டும் மனிதன் தன்னைத் தானே மாற்றிக்*



கார்டினர் ஸ்பிரிங்ஸ்

கொள்ளும் வல்லமையற்றவனாக இருக்கிறான் என்றும், அம்மாற்றத்தை அவனில் கடவுளே ஏற்படுத்த முடியும் என்றும் வலியுறுத்துகின்றன. இவ்விரண்டு காரியங்களைப் பொறுத்தவரையில்தான் "தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு" என்ற போதனை வேதம் போதிக்கும் மறுபிறப்பு பற்றிய போதனையிலிருந்து மாறுபட்டு நிற்கின்றது. ஆகவே, நாம் "தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு" என்ற போதனையின் அடிப்படை அம்சத்தைக் குறித்து ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதாவது மனிதனின் ஆவிக்குரிய நிலை யாது? என்ற வினாவிற்கு நாம் விடையளிக்க வேண்டும்.

கேட்கப்படும் ஒருசில கேள்விகளுக்கு "ஆம்" என்று பதிலளிப்பதன் மூலம் ஒருவர் மறுபிறப்படைய முடியுமா? ஒரு கட்டிடத்தின் உள்ளே அல்லது ஒரு கூட்டத்தில் முகப்பை நோக்கி நடந்து செல்வதன் மூலம் ஒருவர் மறுபிறப்பைப் பெற்றுக் கொள்ள முடியுமா? ஒரு மனிதன் அவனறியாத சூழ்நிலையில் திடீரெனக் கொடுக்கப்படும் அர்ப்பண அழைப்பிற்கு உடன்படுவதன் மூலம் கிறிஸ்தவனாக மாறிவிட முடியுமா? மனிதனுடைய ஆவிக்குரிய நிலைகுறித்து நீங்கள் கொண்டிருக்கும் கருத்துக்களே இக்கேள்விகளுக்கான பதில்களைத் தீர்மானிக்க முடியும். மனிதனுடைய ஆவிக்குரிய நிலைதான் என்ன?

நமது மூதாதையர்களில் ஒருவரான ஸ்கொட்லாந்து தேசத்தைச் சேர்ந்த இறையியல் வல்லுனரான தொமஸ் பொஸ்டன் (1676-1732) மனிதனது ஆவிக்குரிய நிலையை விளக்கும்போது அதை பாவியான ஒரு மனிதனை, ஒரு குழிக்குள் அகப்பட்டிருக்கும் மனிதனோடு ஒப்பிட்டு விளக்குகிறார். குழிக்குள் அகப்பட்டிருக்கும் மனிதன் இரண்டு வழிகளில் ஒன்றின் மூலமே வெளியே வர முடியும். அவன் மிகவும் துன்பப்பட்டு குழியின் பக்கங்களைப் பிடித்து ஏறி மேலே வரலாம்; ஆனால் அது அவனது சுய முயற்சியாக அமையும். அல்லது கிறிஸ்து தனது கிருபையின் மூலமாக குழிக்குள் ஒரு கயிற்றை எறிந்து அவனை மேலே கொண்டு வந்து அவனது துயரங்களிலிருந்து அவனுக்கு விடுதலை யளிக்கலாம். ஆம்! அவன், எறியப்படும் அந்தக் கயிற்றைப்பிடித்துக் கொண்டு மேலே ஏறி வந்துவிடலாம்தான், ஆனால் பாவியாகிய மனிதன் குழிக்குள் மரித்திருப்பதால் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள இவ்விரு வழிகளை யுமே பயன்படுத்த முடியாதவனாயிருக்கிறான்.[15]

மனிதன் அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவனாயிருந்து கடவுளைப் பிரியப்படுத்த முடியாதவனாக இருக்கிறான் (எபேசியர் 2:1; ரோமர் 8:8). நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் மனிதனது நிலையை மிகவும் மோசமான உதவியற்ற நிலையாக வர்ணித்துள்ளார்: "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான். . . ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான்" (யோவான் 6:44; 65).

கூட்டங்களின் முகப்பை நோக்கி நடந்து செல்வதன் மூலமோ அல்லது தீர்மானம் எடுப்பதன் மூலமோ பாவத்தில் மரித்து அதற்குக் கட்டுப்பட்டிருக்கும் நிலையிலிருந்து ஒருவரும் தங்களை மாற்றிக் கொள்ள முடியாது. ஒரு மனிதன் தன்னை கிறிஸ்தவனாக மாற்றிக் கொள்ள முடியாது. ஆவியானவரால் மட்டுமே ஒரு மனிதனை கிறிஸ்துவுக்குள் புதுப்பிக்க முடியும். கடவுள் தனது கிருபையால் ஆத்துமாக்களுக்கு புதிய இருதயத்தைக் கொடுக்கிறார். அதன் பிறகே அவர்கள் மனம் திரும்பி கிறிஸ்து இயேசுவை விசுவாசிக்க முடியும் (எசேக்கியல் 36:26, 27; யோவான் 5:21).

மனிதனுடைய பாவ நிலையின் பின்னனியிலேயே நாம் பாவத்திலிருந்து மனிதனை இரட்சிக்கும் கடவுளின் வல்லமையின் மகிமையைப் புரிந்து கொள்ள முடியும். மறுபிறப்பு பற்றிய போதனைதான் எத்தனை மகிமையுள்ளது. கடவுளின் மகிமைக்காக மட்டுமே நற்செய்தி ஊழியத்தில் ஈடுபடும்படியாக திருச்சபை இன்று மறுபடியும் இந்த வேதபூர்வமான போதனையைப்பின்பற்ற வேண்டும்.

## நாம் என்ன செய்ய வேண்டும்?

இது அமைதியாக இருக்க வேண்டிய நேரமல்ல; நாம் விசுவாசிக்கும்

[redacted]

**கிருபையை நாம் நமது குடும்பத்தில் இருந்து பெறுவதில்லை. நம்மைத் தேவ குழந்தை களாக்குவதற்கு நல்ல போதனைகளை யும், நல்ல உதாரணங் களையும் விட மேலான தொன்று தேவை.**

*- ஜே. ஸி. ரைல்*

சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக்கூற வேண்டிய நேரம் வந்துவிட்டது. எத்தனையோ போலித்தீர்மானங்களுக்கு மத்தியிலும் சிலர் கர்த்தரிடம் வந்திருக்கி றார்களே, ஆகவே இப்போதனையை எதிர்ப்பதால் நற்செய்தி ஊழியத்திற்கு பங்கம் வந்துவிடக்கூடாதே என்ற எண்ணத்தில் இவ்வளவு நாட்களாக நாம் அமைதியாக இருந்துவிட்டோம். ஆனால், பல்லாயிரக்கணக்கானவர்கள் ஒவ்வொரு வாரமும் தவறான வழியை நோக்கி வழிநடத்தப்படுகிறார்கள். கிறிஸ்துவிடம் வாருங்கள்! என்று வழிகாட்டப்பட வேண்டிய ஆத்துமாக்கள் கூட்டங்களில் தீர்மானம் எடுக்க முன்னால் வரும்படி அல்லவா அழைக்கப்படுகிறார்கள். மிக உயர்ந்த சாதனமாகிய பிரசங்க ஊழியம் இன்று வெறும் மாயங்களையும், சூழ்ச்சிகளையும் செய்யும் சாதனமாகவல்லவா மாறிவிட்டது. வேத போதனைகளை திரிபுபடுத்தும் சாதனமாக இப்போலித்தனமான செயல்கள் அமைந்துள்ளன. இந்த இருளடைந்த சூழ்நிலை யில் கர்த்தர் திருச்சபையில் ஒரு எழுப்புலை ஏற்படுத்த நாம் ஜெபிக்க வேண்டும். அத்தகைய எழுப்புதல் கிறிஸ்துவிடம் இருந்து மட்டுமே வர முடியும். கர்த்தருடைய ஆலோசனைகளையும், வழிகளையும் நாம் மறுபடியும் நாடி வர வேண்டும். அவர் பாவிகளுக்கு இலவசமாகக் கொடுக்கும் அழைப்பையும், வேதபூர்வமான நற்செய்திப் போதனையையும் நாம் நாடி வர வேண்டும். அவ்வேளையில்தான் நமது ஊழியங்கள் கர்த்தருக்கு மகிமையைக் கொண்டுவர முடியும். அப்போதுதான் அநேக ஆத்துமாக்கள் மனந்திரும்பிக் கர்த்தரிடம் வருவார்கள்.

Notes on the text

[1] The word “again” is better renderd “from above.” It points to the ultimate source of the new birth, the Triune God.
[2] C.H.Spurgeon, *The New Park Street Pulpit* (London), 1964), Vol. 6,p. 171.
[3] Jack Hyles, *How to Boost your Church Attendance* (Grand Rapids, 1958), pp. 32-35.
[4] Iain H. Murray, *The Forgotten Spurgeon* (London, 1966), p. 111.
[5] Ibid., p. 111.
[6] Robert L. Dabney, *Discussions: Evangelical and Theological* (London, 1967), Vol. 2, p. 13.
[7] Albert B. Dod, “The Origin of the Call for Decisions,” *The Banner of Truth Magazine* (London, Dec., 1963), Vol. 32, p. 9.
[8] Murray, op. cit., 107-109.
[9] John Julian, *A Dictionary of Hymnology* (London, 1907) p. 609.
[10] Hyles, op. cit., pp.43-44.
[11] Recorded in shorthand from a sermon, “The Responsibility of Evangelism,” preached at Grace Baptist Church, Carlisle, Pa., in June, 1969.
[12] For a clearest statement of Finney’s theory of regeneration read his sermon, “Sinners bound to change their own hearts,” *Sermons on various subjects* (New York, 1835). For a detailed examination of Finney’s theology see “Review of Lectures on Systematic Theology”, also Benjamin Warfield, “The Theology of Charles G. Finney,” *Perfectionism* (Philadelphia, 1967), pp.166-215.
[13]. J.H.Merle d’ Aubigne, *The Reformation in England* (London, 1962), Vol.1 p.98.
[14] Charles Hodge, *Systematic Theology* (Grand Rapids, 1970), Vol.2, p.277.
[15] Thomas Boston, *Human Nature in Its Fourfold State* (London, 1964), p.183.


***கட்டுரை ஆசிரியர்:***

*ஜேம்ஸ் இ. அடம்ஸ் மீசா, அரிசோனாவில் 1980 இல் இருந்து கோர்னர்ஸ்டோன் வேதாகம ஐக்கிய சபையின் போதகராகப் பணியாற்றி வருகிறார். இது ஒரு சீர்திருத்த பாப்திஸ்து சபை. ஏற்கனவே ஆங்கிலத்திலும், ஸ்பானிய மொழியிலும் இரு நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். ஸ்பானிய மொழியில் கிறிஸ்தவ இலக்கியங்களை வெளியிடுவதோடு அம்மொழியில் தொடர்ந்து பிரசங்கங்களும் செய்து வருகிறார். 1974-1980 வரை இலத்தீன் அமெரிக்க நாட்டிலும் இவர் ஊழியம் செய்துள்ளார்.*



ஜேம்ஸ் இ. அடம்ஸ்
(*James E. Adams*)

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

[redacted]

***கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே திருமறைக்கல்வி என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவ கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்டின் லூதர், ஜோன் கல்வின் போன்றோர் இதன் அவசியத்தைப் பெரிதும் உணர்ந்திருந்தனர். சார்ள்ஸ் ஸ்பர்ஜன் 1889 இல் தன் சபை மக்களின் நன்மை கருதி இத்தகைய திருமறைக் கல்வி நூலை வெளியிட்டார். இதனையே இங்கு விளக்கக் குறிப்புகளுடன் வழங்குகிறோம்.***

*கேள்வி 31: கிறிஸ்துவால் விலைகொடுத்துப் பெறப்பட்ட மீட்பை ஆவியானவர் நம்மில் எவ்வாறு செயல்படுத்துகிறார்?*

*பதில்: கிறிஸ்துவால் விலை கொடுத்துப் பெறப்பட்ட மீட்பை ஆவியானவர், நமக்கு விசுவாசத்தை அளிப்பதன் மூலமும், திட்ப உறுதியான அழைப்பின் மூலம் கிறிஸ்துவோடு நம்மை இணைப்பதன் மூலமும் நம்மில் செயல்படுத்துகிறார்.*

*(எபேசியர் 2:8; 1 கொரி. 1:9)*

*கேள்வி 32: திட்ப உறுதியான அழைப்பு என்றால் என்ன?*

*பதில்: திட்ப உறுதியான அழைப்பு என்பது ஆவியின் செயலாகும். இதன் மூலம் ஆவியானவர் நமது பாவத்தையும், துன்பங்களையும் உணர்த்தி, கிறிஸ்துவைக் குறித்த அறிவின் மூலம் நமது அகக்கண்களைத் திறந்து, நமது சித்தத்தைப் புதுப்பித்து, நற்செய்தியின் மூலம் இலவசமாக வழங்கப்படும் கிறிஸ்துவை நாம் நாடித் தழுவிக் கொள்ளும்படியாக நம்மை அறிவுறுத்தி இணங்க வைக்கிறார்.*

**விளக்கக்குறிப்பு:** இவ்விரு வினாக்களும் பரிசுத்த ஆவியின் செயல்களைக் குறித்துப் பேசுவதால் இவற்றை நாம் ஒரு சேரப் பார்ப்பது நல்லது. கடவுள் நற்செய்திப் பிரசங்கத்தின் மூலம் பாவிகளைத் தம்மிடம் அழைத்துக் கொள்கிறார்(1 கொரி. 1:21). ஆனால், ஏன் சிலர் மட்டும் நற்செய்தியை ஏற்றுக் கொள்ளும்போது மற்றவர்கள் அதனை நிராகரித்து விடுகிறார்கள்? என்ற வினா எழத்தான் செய்கிறது. இதற்கு பதிலளிக்கும்போது முதலாவதாக, நற்செய்தி இதற்குக் காரணமல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரே செய்தியே அனைத்து மக்களுக்கும் பிரசங்கிக்கப்படுகிறது. கிறிஸ்து, எல்லா மனிதர்களுக்கும், எல்லாப் பாவிகளுக்கும், எந்தவித பாரபட்சமுமின்றி இலவசமாக நற்செய்தியின் மூலமாக வழங்கப்படுகிறார். சிலர் "தெரிந்து கொள்ளப்பட்டவர்"களுக்காக மட்டுமே நற்செய்தியின் மூலம் கிறிஸ்து இலவசமாக வழங்கப்படுவதாகக் கூறுவர். இவர்கள், "கடவுள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை இரட்சிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளதால் அவர்களுக்கு மட்டும் நற்செய்தி மூலம் கிறிஸ்துவை வழங்குவதுதான் முறையானது" என்று கூறுவர். "வேறு எவருக்கும் கிறிஸ்துவை வழங்குவது நியாயமாகாது" என்றும் வாதிப்பர். ஆனால் இவ்வாதம் தவறானது. கர்த்தர் தெரிந்து கொண்டவர்களை இரட்சிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தபோதும், நற்செய்தியின் மூலமாக கிறிஸ்து அனைவர் மத்தியிலும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார் (மத்தேயு 28:19,20). "கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிற எவனும் இரட்சிக்கப்படுவான்" (ரோமர் 10:13). ஆகவே, எந்தவொரு மனிதனும் கிறிஸ்துவிடம் வருவதைத் தடை செய்யும் எந்தக் காரணியும் நற்செய்தியில் தங்கியிருக்கவில்லை.

இரண்டாவதாக, இவ்விரு மனிதர்களுக்கும் இடையில் காணப்படும் வேறுபாட்டிற்கான காரணம் அவர்களில் தங்கியிருக்கவில்லை. கர்த்தரை அறிந்து கொண்ட மனிதன் அவரை நிராகரித்தவனைவிட நல்ல இருதயத்தைக் கொண்டிருந்தான் என்று கூற முடியாது. ஏனெனில் வேதம் எல்லா மனிதர்களும் அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருக்கிறார்கள் என்று போதிக்கின்றது (எபேசியர் 2:1). ஆகவே, எந்தவொரு மனிதனும் நற்செய்தியை இயற்கையாக வரவேற்று கிறிஸ்துவை நாடி ஓடி வரமாட்டான் (1 கொரி. 2:14). உண்மை எதுவெனில், கடவுள் மனிதரை அவர்கள் இருக்கும் நிலையில் தொடர்ந்திருக்குமாறு கைவிட்டுவிடுவாரானால் உலகத்திலுள்ள எந்தவொரு மனிதனும் ஒரு போதுமே கர்த்தரை இயற்கையாக நாடி ஓடி வரமாட்டான். இருப்பினும் சில மனிதர்கள் மட்டும் நற்செய்தியை ஏற்றுக் கொள்வதை நாம் அறிந்திருக்கிறோம். ஏன் மனிதர்களில் சிலர் மட்டும் இவ்வாறு நற்செய்தியை ஏற்றுக்

**தாம் தெரிந்தெடுக்கப் பட்டவர்களில் ஒருவர் என்ற அறிவினால் எவருமே கிறிஸ்துவிடம் வந்ததில்லை: கிறிஸ்து தனக்குத் தேவை, கிறிஸ்துவை நான் அடைய வேண்டும் என்றுதான் எவரும் அவரிடம் வந்துள்ளனர்.**
*- ஏர்னஸ்ட் கெவன்*

கொள்கிறார்கள்? இதற்கு பதில், சிலர் திட்ப உறுதியாக அழைக்கப்பட்டிருப்பதுதான். அவர்கள் திட்ப உறுதியாக அழைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், அவர்கள் மெய்யான நற்செய்தியைக் கேட்டிருப்பது மட்டுமன்றி பரிசுத்த ஆவியினால் மறுபிறப்படைந்திருக்கிறார்கள். இதை மேலும் விளக்குவதானால் நற்செய்தியைக் கேட்ட சிலருடைய இதயத்தில் பரிசுத்த ஆவி பெரும் அற்புதத்தைச் செய்கிறார் எனக்கூறலாம். இதனை உயிர்ப்பித்தல் (எபே.2:5), சிருஷ்டித்தல் (எபே.2:10), மறுபிறப்படைதல் (யோவான் 3:4,7), கிறிஸ்துவில் எழுப்புதல் (எபே.2:7) என்று பலவிதமாக வேதம் வர்ணிக்கின்றது. இவ்வாறு ஆவியால் புதுப்பிக்கப்பட்டு மறுபிறப்படைந்த மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள சில முக்கிய அம்சங்களைக் கவனிக்கலாம். முதலாவதாக, அவர்களது வாழ்க்கையில் நற்செய்தி ஒரு பேரும் மாற்றத்தை ஏற்படுத்தி யிருக்கும். முன்பு பயித்தியமாகத் தோன்றிய நற்செய்தி இப்போது அவர்களுடைய இதயத்தைப் பிளக்கின்றது (அப். 2:37). முன்பு சாதாரன மனிதர்களுடைய வார்த்தைகளாகத் தோன்றிய நற்செய்தி இப்போது சத்தியமாகவும், வேதமாகவும் அவர்களுக்குத் தோன்றுகிறது.


இதனைக் கிறிஸ்து லாசருவை உயிர்த்தெழச் செய்த நிகழ்ச்சியின் மூலம் மேலும் தெளிவாக விளக்கலாம். உயிரிழந்து, செயலிழந்திருந்த லாசருவைக் கிறிஸ்து தனது வார்த்தையின் வல்லமையால் உயிர்த்தெழச் செய்தார். லாசரு அவ்வார்த்தைகளைக் கேட்டு எழும் வல்லமையைக் கிறிஸ்து அவனுக்கு அளித்தார். இதேபோல்தான் பாவத்தில் மரித்திருக்கும் மனிதர்களில் சிலர் கிறிஸ்துவின் சத்தத்தை நற்செய்தியின் மூலம் கேட்கிறார்கள். பலர் அதைக் கேட்டு மறு காதின் வழியில் விட்டுவிடுகின்ற போது வேறு சிலர் அதைக்கேட்டு மறுபிறப்படைகிறார்கள்.


இவ்வாறு மறுபிறப்படையும் மனிதர்களில் முன்று காரியங்களை நாம் பார்க்கலாம்.

1. அவர்கள் நற்செய்தியைப் புரிந்து கொள்வார்கள்.
2. தங்களுடைய பாவத்தையும், கடவுளுக்கு முன்னால் தாம் குற்றவாளிகளாக இருப்பதையும் உணர்ந்து தம் நிலை கருதி வருந்துவார்கள்.
3. ஆகவே, தமது பாவத்திலிருந்து மனந்திருந்தி கிறிஸ்துவை விசுவாசிப்பார்கள்.

இறுதியாகத் தவிர்க்க வேண்டிய இரு தவறான எண்ணங்களைப் பார்ப்போம்:

1. நமது ஆழமான உணர்ச்சிகளையும், அனுபவங்களையும் ஆவியின் திட்ப உறுதியான அழைப்பின் அடையாளமாகக் கருதிவிடக்கூடாது. வேதம், ஒருவன் ஆழமான அனுபவங் களைக் கொண்டிருந்தும் கிறிஸ்துவின் பிள்ளையாக இல்லாமல் போகலாம் என்று போதிக்கின்றது (மத்தேயு 13:5, 20, 21; எபிரேயர் 6:4-8).
2. அடுத்த தவறு, நாம் மறுபிறப்படையவில்லை என்று சாக்குப்போக்குக்கூறி நற்செய்திக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது. கர்த்தர் அனைவரையும் நற்செய்திக்குக் கீழ்ப்படியும்படி அழைக்கிறார். ஒருவரும் சாக்குப் போக்குச் சொல்ல முடியாது. நாம் மறுபிறப்படைந்திருக்கிறோமா என்று தெரிந்து கொண்டு பின்பு விசுவாசிக்கும்படி தேவன் கூறவில்லை. நற்செய்திக்குக் கீழ்ப் படிந்து கிறிஸ்துவை விசுவாசித்த பின்பே நாம் ஆவியால் மறுபிறப்படைந்திருப்பதையும், திட்ப உறுதியாக அழைக்கப்பட்டிருப்பதையும் அறிந்து கொள்கிறோம்.








# வில்லியம் கேரி



**கர்த்தரிட மிருந்து பெருங் காரியங்களை எதிர் பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ் சாதனைகளைச் செய்யுங்கள்**

**இந்திகோ தொழிலில் மிஷனரி வில்லியம்**

இந்தியாவை அடைந்ததும் அங்கு ஊழியத்திற்கு சரியான இடம் அமையும்வரை மாறி மாறி பல இடங்களில் கேரி குடும்பத்தோடு வாழ வேண்டியிருந்தது. கேரிக்கு ஒரு இந்திகோ தொழிற்சாலையில் வேலை கிடைத்தது. அக்காலத்தில் அவரது மாத சம்பளம் 200 ரூபாய். இந்திகோ செடியில் இருந்து ஒருவித நீல நிற சாயத்தை உருவாக்கும் இத்தொழில் முறைகளைக் கேரி கற்றுக் கொண்டார். ஆகஸ்ட் 4 ஆம் திகதி (1800) கேரி இந்தியாவில் தனது முதல் சொந்த வீட்டிற்கு தனது குடும்பத்தை அழைத்து வந்தார். புதிதாகக் கட்டப்பட்ட இந்த இரண்டு மாடிக்கட்டடம் தங்கான் எனும் இடத்தில் இருந்தது. அவரது வேலைத்தளமும் இங்கேயே இருந்தது. கேரி, இவற்றின் மூலம் கர்த்தருக்கு ஊழியம் செய்ய பெரு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதை எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைந்தார். அதற்கான காரியங்களிலும் உடனடியாக ஈடுபடத்துவங்கினார். இதைப்புரிந்து கொள்ளாத அவருடைய தொழிற்சாலை சொந்தக்காரர்கள் தொழில் ஆரம்ப நாளில் தமது இஷ்ட தெய்வமான காளிக்கு காணிக்கை பெற்றுக்கொள்ள கேரியை நாடி வந்தனர். ஆனால் கேரி அவர்களிடம் காளிக்கு காணிக்கையளிப்பதைவிட தான் இறப்பது மேல் என்று கூறி அனுப்பி வைத்தார். அவர்கள் செய்வதை அவர் தடை செய்ய விரும்பியபோதும் அதனால் ஏதும் பலன் இல்லை என்பதால் அவர் வாளாவிருக்க நேரிட்டது.

இக்காலத்தில் கேரியின் முழுக்குடும்பமும் மலேரியா நோயினால் பெருந்துன்பப்பட்டது. கேரியின் ஐந்து வயது மகன் பீட்டர் அதிலிருந்து குணமடைய முடியாமல் இரண்டு வாரங்களில் இறந்தான். மலேரியா பயத்தால் ஊரில் ஒருவரும் கேரிக்கு உதவ முன்வரவில்லை. ஒரு இந்துவோ, இஸ்லாமியரோகூட கேரியின் மகனைப் புதைக்க முன்வரவில்லை. தொழிற்சாலை தச்சர்கள்கூட பீட்டரைப் புதைக்க ஒரு பெட்டியைச் செய்து கொடுக்க முன் வரவில்லை. இச்சமூகக் கட்டுப்பாடுகளினால் கேரியின் குடும்பத்தின் துன்பம் இருமடங்காகியது. தனிமையும் அவர்களை வாட்டியது. இறுதியில் கிராமத்தில் நான்கு பேர் கேரிக்கு உதவ முன்வந்து பீட்டரைப் புதைக்க உதவி செய்தனர். இதையறிந்த கிராமத் தலைவன் அந்நான்கு பேரையும் கிராமத்தில் இருந்து தள்ளி வைத்தான். ஒருவரும் அவர்களோடு பேசவோ, உணவருந்தவோ, குடிக்கவோ அனுமதிக்கப்படவில்லை.

மலேரியா நோயிலிருந்து குணமடையவும், ஓய்விற்காகவும் கேரி பூட்டானில் தோமஸுடன் சிறிது காலம் செலவிட்டார். சாதிப் பிரச்சனையற்ற பூட்டான் மக்களின் பரந்த மனப்பான்மை கேரியைக் கவர்ந்தது. அம்மக்கள் மத்தியில் ஒரு ஊழியத்தை ஏற்படுத்த தொமஸும். கேரியும் உறுதி பூண்டனர். பிரித்தானியரைப் பற்றி அம்மக்கள் கொண்டிருந்த அபிப்பிராயம் இதற்குத் தடையாக இருந்ததைக் கேரி உணர்ந்தார். பிரித்தானியர்கள் தம்மைக் கட்டுப்படுத்த முயல்வதாக அம்மக்கள் கருதினர்.

கேரி தனது ஊருக்குத் திரும்பியபின் இந்திகோ நாகரிகத்தை மக்கள் மத்தியில் பரப்ப பெரிதும் முயன்றார். உள்ளூர் விவசாயிகள் இதற்கு பெரும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். இத்தொழிலில் ஈடுபட்டிருந்த



**ஆரம்பத்தில் ஆங்கிலேயர் கள் பணம் சம்பாதிக்க வியாபாரிகளாக இந்தியாவுக்கு வந்தனர்; அதன் பின்பு போர்வீரர்களாக நாட்டைப் பிடிக்க வந்தனர். வில்லியம் கேரி வந்த போதுதான் மனிதாபிமான மும் அவரோடு இந்தியாவிற்கு வந்தது.**

*- ஏ. எம். பெயார்பரின் ,இந்தியா, 1898.*

*சாகிபுகளே, உள்ளூர்வாசிகள் பிரித்தானியரைப்பற்றித் தவறான எண்ணம் கொள்ளக் காரணமாக இருந்தனர் என்பதைக் கேரி உணர்ந்தார். காலம் செல்லச் செல்ல கேரி மற்ற வியாபாரிகளையும்விட வித்தியாசமான மனிதராக இருப்பதை உள்ளூர் விவசாயிகள் உணர்ந்தனர். உள்ளூர் நிலச் சொந்தக்காரர்கள் விவசாயிகளைக் கொள்ளையடிப்பதை அறிந்து கேரி பெரும் ஆத்திரம் கொண்டார். அவ்வாறு தொழிலாளர்களை ஏமாற்றிக் கொண்டிருந்த ஒரு குமாஸ்தா கேரியிடம் பிடிபட்டுத் தனது வேலையை இழக்க நேரிட்டது.*

*முடான்பட்டியில் தான் மட்டுமே ஆங்கிலேயராக இருந்ததால் ஊர் மக்களுடைய கலாச்சாரத்தையும், பெங்காலி, ஹிந்துஸ்தானி ஆகிய மொழிகளையும் பயில கேரிக்கு ஒரு வருடமெடுத்தது. அதுமட்டுமல்லாது மாவட்டத்திற்கு மாவட்டம் மக்கள் பேசிய பெச்சு வழக்கிலும் பெரும் வேறுபாடு இருந்ததைக் கேரி உணர்ந்தார். இந்தியாவில் தான் அனுபவித்த முதல் பனிக்காலம் மிகக்குளிராக இருந்தது கேரிக்கு ஆச்சரிய மளித்தது. மலேரியா தொல்லை நீங்கிவிட்டபோதும் அதன் பாதிப்பு இன்னும் அவரை விட்டு முற்றும் அகலவில்லை. இந்தியாவில் வெய்யிலைவிட குளிரே அதிக நோய்களை உருவாக்குகின்றது என்று கேரி பின்பு குறிப்பிட்டார்.*

## டொரத்தி கேரியின் மனநிலை பாதிப்பு

*கேரியின் மனைவியின் நிலை மலேரியாவினால் மேலும் மோசமடைந்தது. 1795 களில் மீண்டும் வாந்திபேதியால் பாதிக்கப்பட்டு, அவரது மனநிலை மோசமடைந்தது. மனக்கோளாரால் பயமும், கொடூரமான கனவுகளும் அவரைப்பிடித்து வாட்டின. வழமையாக அவரில் காணப்படும் எல்லாவற்றிற்கும் மாறான அனைத்தும் டொரத்தியில் குடிபுகுந்தன. இதுவரைத்தான் நேசித்து வந்த அனைவர் மேலும் அவர் ஆத்திரம் கொண்டார். தனிமையில் ஒன்றும் பேசாமல் எங்கோ தொலைவை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கத் தொடங்கினார். எந்தவித அத்தியாவசிய வசதிகளுமற்ற நாடாக இந்தியா இருந்த காலத்தில் அங்கு குடி புகுந்ததற்கான பரிசை டொரத்தி பெற வேண்டியிருந்தது. இந்நிலைக்கான உண்மைக்காரணங்களை அறியாதவர்கள் கல்லை மட்டுமே எறிவார்கள். ஆனால் இந்நிலையில் இரக்கம் காட்டுவது மட்டுமே முறையான செயலாக இருக்க முடியும்.*

*தனது மனைவியின் நிலைக்கான முழுக்காரணத்தையும் கேரி ஆரம்பத்தில் உணரவில்லை. டொரத்தியின் செயல்களால் அவர் தனிமையில் வாடி கர்த்தரிடம் ஆறுதல் அடைந்தார். இதுபற்றி இங்கிலாந்தில் இருந்த தனது நண்பர்களுக்கும் எழுதினார். பல தடைகளால் கடிதப்போக்குவரத்து சரியாக அமையாததால் அவரது தனிமை மேலும் அதிகரித்தது. தோமஸ் கேரிக்கு பின்வருமாறு எழுதினார்: "டொரத்தியைப் பிடித்திருப்பதை ஒரு நோயாக நீர் கருத வேண்டும். பலருடைய கண்களும் உம்மீது இருக்கின்றன. நீர் ஆத்திரமடைந்தால் அது பலருக்கு ஆனந்தத்தை அளிக்கும், அத்தோடு வேறு சிலருடைய நாவுகளும் அக்கினி ஜுவாலையைக் கக்கலாம். உமது நிலையில் நானிருந்தால் சண்டைக்காரனாக மாறியிருப்பேன். கர்த்தருக்கு ஆசீர்வாதம், நம்மால் தாங்கக்கூடியதை அவர் நமக்குத் தருகிறார். நான் உமக்காகத் தொடர்ந்து அனுதாபத்துடன் ஜெபிக்கிறேன். உமது ஊழியத்தில் மனதைச் செலுத்தும். கிறிஸ்துவை எண்ணிப்பாரும். இவையனைத்துமே சிறிது காலத்திற்கு மட்டும்தான், அதன்பின் எல்லாமே ஒரு நல்ல முடிவுக்கு வரும்."*


*இரண்டு வருடங்கள் கேரிக்கு இங்கிலாந்துடன் எந்தத் தொடர்பும் இல்லாதிருந்தது. இதுவும் டொரத்தியின் மனநிலையை மேலும் மோசமாக்கியது. இறுதியில் ஒருவிதமாக புள்ளரிடம் இருந்து கடிதம் வந்தது. கடிதத்தில் கேரியின் குடும்ப விபரங்கள் தவிர சபைகளின் ஊழியங்கள் பற்றியும் விபரமாக புள்ளர் எழுதியிருந்தார். கேரி போதகராக இருந்த சபை பெருமளவில் வளர்ச்சியடைந்து வருவதாகக் கடிதம் தெரிவித்தது. கேரிக்கு கடித விபரங்களை பெரும் ஆறுதலை அளித்தன.*

*மனைவியின் மனநிலைக்கான காரணத்தை ஆரம்பத்தில் உணராத கேரி சஞ்சல மடைந்தபோதும் அதற்கான முழுக்காரணத்தையும் உணர்ந்தபோது அனுதாபத்தால் முழு மௌனத்தைக் கடைபிடித்தார். கர்த்தருடைய ஊழியனான கேரி அனுபவித்த துன்பங்கள்தான் எத்தனை. தொல்லைகள், துயரங்கள் தவிர்ந்த, பகட்டான ஊழியங் களை நாடி ஓடும் நவீன மிஷனரிகளும், கர்த்தரை மட்டும் நம்பி சத்திய வாஞ்சை யோடு ஊழியம் செய்யாமல் தம்மை வளர்த்துக் கொள்வதையே ஊழியமாகக் கொண்டுள்ள நவீன போதகர்களும் வலம்வரும் தமிழ் மண் கேரியை நினைவு கொள்வது அதன் ஊழியங்களுக்குப் பெரு நன்மை பயக்கும்.* *(வளரும்)*

*ஜே. ஐ. பெக்கர், ஜோன் ஓவனின் நூலுக்கு வழங்கிய முன்னுரை.*

# கிருபையின் கோட்பாடுகள்

*- ஓர் அறிமுகம் -*



***இது ஜோன் ஓவனின் காலத்தால் அழியாத 'மரணத்தினால் உண்டாகும் வாழ்வு' நூலுக்கு வழங்கப்பட்ட முன்னுரை. வேதம் போதிக்கும் கிருபையின் போதனைகளுக்கு இது மிகவும் அருமையான அறிமுகம். வாசகர்கள் வாசித்து சிந்தித்துப் பயனடைய வேண்டிய தொடரிது.***

கல்வினிசக் கோட்பாடுகள் ஐங்கோட்பாடுகளை விடப் பெரியது, முழுமையானது. ஆகவே, கல்வினிசக் கோட்பாடுகளுக்கும் ஆர்மீனியக் கோட்பாடுகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை ஐங்கோட்பாடுகளால் மட்டும் முழுமையாக விளக்கிவிட முடியாது என்று விளக்கும் ஐந்து காரணங்களில் நான்கினை இதுவரைப் பார்த்தோம். ஐந்தாவது காரணத்தை இப்போது பார்ப்போம்.

(5) ஐங்கோட்பாடு இன்னுமொருவிதத்தில் குறைபாடுள்ளதாகக் காணப்படுகின்றது. அதாவது ஆர்மீனியக் கோட்பாட்டை எதிர்த்து அது கொடுக்கும் விளக்கத்தின் வடிவமே (ஆர்மீனியக் கருத்துக்களுக்கு வரிசையாக மறுப்புத் தெரிவிப்பதால்) அதற்கு எதிரியாக அமைந்து விடுகின்றது. எப்படியெனில், ஆர்மீனியக் கோட்பாட்டின் மாற்றியமைக்கப்பட்ட வடிவமே கல்வினிஸக் கோட்பாடு என்ற தவறான எண்ணத்தை அது தோற்றுவிக்கிறது. மேலும், ஆர்மீனியக் கோட்பாடே சுபாவப்படி முதன்மைச் சிறப்புப் பெற்றதாகவும், கல்வினிசக் கோட்பாடுகள் அதிலிருந்து தோன்றி வளர்ந்த கோட்பாடுகளே என்ற எண்ணத்தையும் தோற்றுவிக்கிறது. வரலாற்றுப் பின்னணியில் ஒருவர் இதனைத் தவறு என்று சுட்டிக் காட்டினாலும் இவ்விரு கருத்துக்களுக்குமிடையே உள்ள உண்மையான தொடர்பு இது மட்டுமே என்ற சந்தேகம் பலருடைய மனதில் இன்று நிலைத்திருக்கிறது. ஆர்மீனியனிசம், இன்று பரவலாகக் காணப்படுகின்ற கிறிஸ்தவத்தோடு ஒத்துப் போகின்றபடியால், அது இயற்கையாகவும், பாரபட்சமற்ற விதத்திலும், கலப்படமற்ற வகையிலும் வேதத்தைப் படித்ததன் விளைவாக ஏற்பட்டதொன்று என்ற எண்ணம் இன்று பலர் மத்தியில் காணப்படுகின்றது. அதேவேளை, கல்வினிசம் இயற்கைக்கு மாறான ஒரு போதனை எனவும், வேத வசனங்கள் தாங்களாகவே கொடுக்கக்கூடிய அர்த்தத்தை விடுத்து அவற்றின் அர்த்தத்தைத் திரித்துக்கூறி, ஒரு முறையான வடிவமைப்புக்குள் கொண்டு வந்து வேதத்தின் சம நிலையை இழக்கச் செய்துள்ள ஒரு போதனை என்ற தப்பெண்ணமும் நிலவுகின்றது.

தனிப்பட்டவர்கள் கல்வினிசத்தைக்குறித்து என்ன நினைத்தாலும், அதைப்பற்றிப் பொதுவாக நிலவும் கருத்து இதுதான் என்பது உண்மைக்கு மாறுபாடானதல்ல. ஆர்மீனியக் கோட்பாடு ஒருவகையில் இயற்கையானதுதான். ஏனெனில் இது தன் தலைவிதிக்குத் தானே தலைவன், தன் ஆன்மாவுக்குத் தானே எஜமான் என்ற மயக்கத்தில் இருக்கும் பாவ சிந்தையுள்ள மனிதனின் வேதத்தைத் திரிபுபடுத்தும் செயலையே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இத்திரிபை ஆதித்திருச் சபையின் காலத்தில் பெலேஜியனிசம், செமி-பெலேஜியனிசம்

**உண்மையில் கல்வினிஸம் தான் வேதத்தை அதன் இயற்கையான, தவிர்க்க முடியாத அர்த்தத்தில் புரிந்து கொள்கிறது; வேதம் எதைச் சொல்கிறதோ அதை மட்டுமே கல்வினிஸம் பின்பற்றுகிறது.**

ஆகியவற்றிலும், அதன் பின்பு வந்த சமய நுணுக்க முறை (Scholasticism) எனும் கொள்கையிலும் காணப்பட்டது. பின்பு பதினேழாம் நூற்றாண்டிலிருந்து, ரோமன் கத்தோலிக்க மார்க்கம், புரட்டஸ்தாந்து, மெலும் பல்வேறுவிதமான பகுத்தறிவு வாதம் சார்ந்த பிரஜா அனுகூலவாதக் கொள்கை (Rationalistic Liberalism), தற்கால சுவிஷேச இயக்கப் போதனை ஆகியவற்றில் மீண்டும் மீண்டும் இடம் பெற்று வந்துள்ளது. அதுமட்டுமல்லாமல், இது நம்மத்தியில் என்றும் தொடர்ந்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. பாவத்தில் வீழ்ந்த மனித இயல்பானது தொடர்ந்து அதே நிலையில் இருக்கும்வரை ஆர்மீனிய வழியிலான இச்சிந்தனைப் போக்கும் "இயற்கையாகவே" ஏற்படும் தவறான சிந்தனையாக தொடர்ந்திருக்கும். ஆனால் இது வேறு எவ்வகையிலும் இயற்கையானது அல்ல. உண்மையில் கல்வினிஸம்தான் வேதத்தை அதன் இயற்கையான, தவிர்க்க முடியாத அர்த்தத்தில் புரிந்து கொள்கிறது; கல்வினிஸம் வேதம் எதைச் சொல்கிறதோ அதை மட்டுமே பின்பற்றுகிறது. கல்வினிஸமே பின்வரும் வேதசத்தியங்களை நாம் கருத்தூண்றி விசுவாசிக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றது:

கடவுள் இரட்சிக்கிறார்;
எவரெவரைத் தெரிந்தெடுத்துக்கொண்டிருக்கிறாரோ அவர்களையே இரட்சிக்கிறார்;
எந்த ஒரு மனிதனும் பெருமை பாராட்டாதபடிக்கு அவர்களுடைய கிரியை களினாலல்லாமல் தனது கிருபையினால் அவர்களை இரட்சிக்கிறார்;
கிறிஸ்துவை பரிபூரணமான இரட்சகராக அவர்களுக்கு வழங்குகிறார்;
அவர்களது முழு இரட்சிப்பும் சிலுவையிலிருந்து புறப்பட்டு வருகின்றது;
அவர்களுடைய மீட்புப்பணி சிலுவையில் பூரணமாக நிறைவேறியது.

ஆகவே சிலுவைக்கு மகிமை சேர்ப்பது கல்வினிஸமே. கல்வின் கோட்பாட்டாளர் பின்வருமாறு பாடுகிறார்கள்:

நகரமதில் இன்றி தூரத்திலே
ஆங்கோர் பசுமலை உள்ளதுவே
அன்பின் ஆண்டவர் அங்குதானே
சிலுவையில் அடைபட்டாரே;

விடுதலை பெற்று இரத்தத்தால் - இறுதியில்
வீடுபேறு அடைய அவர்
மரித்தார் நாம் மீட்கப்படும்படியாக
மரித்தார் நாம் மன்னிக்கப்படும்படியாக
மரித்தார் நாம் நல்லோர் ஆகிடவே.

தன்னுடைய குமாரனின் மரணத்தின் மூலமான இரட்சிப்பு என்பது தேவனுடைய நிறைவேறாத ஒரு ஆசை எனவும், அது நிறைவேற வேண்டுமானால் அதை விசுவாசிப்பதற்கு மனிதன் சித்தங்கொள்ள வேண்டும் என்றும், கடவுளால் செய்ய முடிந்ததெல்லாம் கிறிஸ்துவை சிலுவையில் பலி கொடுத்தது மட்டுமே, அதனால் ஒருவருமே இரட்சிக்கப்படவில்லை என்றும் ஆர்மீனியர்கள் கூறுவதுபோல் கல்வின் கோட்பாட்டாளர் பூசி மெழுக மாட்டார்கள் என்பதை மேல்வரும் பாடலின் வரிகள் நமக்குத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன. கல்வின் கோட்பாட்டாளர் சிலுவையானது தேவனுடைய இயலாமையை அல்ல, அவரது இரட்சிக்கும் வல்லமையையே எடுத்துக் காட்டுவதாக வலியுறுத்துகிறார்கள். சந்தேகத்துக்குரிய ஒரு

*"கடவுளின் ஊழியக்காரர்கள் விசுவாசத்திற்காக ஊக்கத்துடன் போராடுவது மட்டுமல்லாமல் சத்தியத்தை வேதபூர்வமாகத் தெளிவாக எடுத்துரைப்பதையும் தமது ஊழியமாகக் கொள்ள வேண்டும். சத்தியத்தை வெளிப்படையாக எதிர்ப்பதையும் விட மிக மோசமான ஆபத்து அதைத் திரிபுபடுத்துவதிலும், தவறான விதத்தில் விளக்குவதிலும் தங்கியிருக்கிறது."*

*- ஏ. டபிள்யூ. பின்க்*

**கிறிஸ்துவுக்குள் புதிதான ஒரு கிறிஸ்தவனுடைய உள்ளத்தில் எழுதப்பட்டுள்ள இயற்கையான இறையியலே கல்வினிஸமாகும். ஆனால் ஆர்மீனியனிஸமோ அறிவாற்றலினால் ஏற்பட்ட பலவீனத்தின் பாவமாகும்.**

இரட்சிப்பை ஐயநிலையிலுள்ள விசுவாசிகளுக்காகப் பெற்றுத்தராமல், தெரிந்து கொள்ளபட்ட தனது மக்களுக்காக மெய்யான இரட்சிப்பைக் கிறிஸ்து பெற்றுத் தந்தார். அவரது விலையேறப்பட்ட இரத்தம் உண்மையில் நம் எல்லோரையும் இரட்சிக்கிறது. சிலுவையின் நோக்கத்தின்படி கிறிஸ்து தன்னைத்தானே ஒப்புக் கொடுத்ததால் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் அனைத்தும் நிச்சயமாக நிறைவேறுகின்றது. இரட்சிப்பின் வல்லமை விசுவாசத்தில் தங்கியிருக்கவில்லை. உண்மையில் இரட்சிப்பின் வல்லமையில் இருந்துதான் விசுவாசமே புறப்படுகின்றது. கிறிஸ்து மரித்தவர்களுக்கான பூரணமான இரட்சிப்பை சிலுவை பெற்றுத் தருகின்றது. "நானே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே அல்லாமல் வேறொன்றைக்குறித்தும் மேன்மை பாரட்டாதிருப்பேனாக!" (கலா. 6:14).

இப்போது இரட்சிப்பைக் குறித்த கல்விளிஸப் போதனையின் மெய்த்தன்மை தெளிவாகின்றது. இது ஒரு செயற்கையான விந்தையோ அல்லது துணிகரமான தர்க்கத்தின் விளைவோ அன்று. தேவன் பாவிகளை இரட்சிக்கிறார்; கிறிஸ்து நம்மை அவரது இரத்தத்தின் மூலம் மீட்டார் என்பதே கல்வினிஸத்தின் மைய அறிக்கையாகும். வேதமும், விசுவாசிக்கும் ஒவ்வொரு இதயமும் இதையே சாட்சியாகப் பகர்கின்றன. ஜெபிக்கும்போது கடவுளுக்கு முன் தனது இதயத்தில் எதை விசுவாசிக்கின்றானோ அதையே தனது இறையியலில் மனிதர்களுக்கு முன்பாக அறிக்கையிடுபவன் கல்வின் கோட்பாடுகளைப் பின்பற்றுபவன். மற்றவர்களுடைய ஆத்துமாக்களுக்காக ஜெபிக்கும்போது அல்லது இரட்சிப்பின் மகிமை அனைத்தையும் தனது இரட்சகருக்கே கொடுக்கும்படியாக, உலக மேன்மைகளனைத்தையும் மறுக்கும்படி உள்ளத்திலிருந்து துள்ளியெழும் ஆராதிக்கத்தக்க சிந்தைக்குக் கீழ்ப்படியும்போது கல்வின் கோட்பாட்டாளன் ஏனைய கிறிஸ்தவர்களைப் போலவே எப்போதும் தேவனுடைய கிருபையின் மாட்சியைக் குறித்து சிந்தித்துப் பேசுகிறான். கிறிஸ்துவுக்குள் புதிதான ஒரு கிறிஸ்தவனுடைய உள்ளத்தில் எழுதப்பட்டுள்ள இயற்கையான இறையியலே கல்வினிஸமாகும். ஆனால் ஆர்மீனியனிஸமோ அறிவாற்றலினால் ஏற்பட்ட பலவீனத்தின் பாவமாகும். எந்த வகையில் எல்லாப் பாவங்களும் இயற்கையானதோ அதேவிதத்தில் மறுபிறப்படைந்தவர்களிடமும் இதனை இயற்கையாகவே காணலாம். ஒரு கிறிஸ்தவன் தனது அறிவாற்றலைப் புரிந்து கொண்டு அதில் நிலைத்து நிற்கும்போது அவன் கல்வின் கோட்பாட்டாளனின் சிந்தையைக் கொண்டிருக்கிறான். ஒருவன் மாம்சத்தின் பலவீனத்தின் மூலம் அவ்வாறிருக்கத் தவறும்போது அவன் ஆர்மீனியக் கோட்பாட்டாளனைப் போலத் தோற்றமளிக்கிறான். வேதம் போதிப்பவற்றிற்கு மாறாக தனது சிந்தையை சர்ச்சைகளாலும், தவறான பாரம்பரியங்களினாலும் அலைக்கழிக்கப்படாமல் இருந்தவரை திருச்சபை கைக்கொண்டு போதித்து வந்துள்ள சத்தியம் கல்வினிஸம் மட்டுமே. அநேக மேற்கோள்களின் மூலம் ஆதித்திருச்சபை இவ்வைங் கோட்பாடுகளுக்கு சாட்சி பகர்ந்து வந்துள்ளதை எடுத்துக் காட்ட முடியும். ஓவன் அடிகளார் தனது நூலில் சிலவற்றை சேர்த்துள்ளார். பிரபல பாப்திஸ்து போதகரும், இறையியலறிஞருமான ஜோன் கில்லின் நூலான "தேவனுடைய நோக்கமும் சத்தியமும்" எனும் நூலில் மேலும் அதிகமானவற்றைக் காணலாம்.

ஆகவே வேதத்தின் இரட்சிப்பைக் குறித்த போதனைகளை விளக்கும் இச்சத்தியத்தைக் கல்வின் கோட்பாடுகள் என்றழைப்பது தவறான போக்கில் வழி நடத்துவதாகும். ஏனெனில் இது ஜோன் கல்வினுக்கோ அல்லது டோர்ட் சமயக்குழுவின் இறையியல் வல்லுனர்களுக்கோ சொந்தமான போதனையல்ல. இது கடவுளால் வெளிப்படுத்தப்பட்டுள்ள வேத சத்தியங்களில் ஒரு பகுதியும், உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயத்தின் விசுவாசமுமாகும். இப்போதனை பல நூற்றாண்டுகளாக கல்வினிஸம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு, அருவருக்கப்பட்டு,

***தேவனின் ஆணையாகிய தெரிந்தெடுத்தல் விசுவாசத்தையும், பரிசுத்தத்தையும் உள்ளடக்காமல் ஒருவரின் இரட்சிப்பைப் பெற்றுத்தருவதில்லை; இரட்சிப்பு அவற்றை உள்ளடக்கியதாகவே அமைந்துள்ளது. ஆகவே இரட்சிப்பைப்போலவே அதற்குரிய காரணிகளும் கடவுளால் ஆணையிடப் பட்டுள்ளன. - ஏ. ஏ. ஹொட்ஜ்***

[redacted]

**கிறிஸ்துவை இரட்சகராகப் பறை சாற்றுவதே சுவிஷேசம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள். இருப்பினும் அவரது இரட்சிக்கும் செயலின் தன்மையும், அவரது மீட் புப் பணியும் யாரை உள்ளடக்கியது? என்பவற்றைக் குறித்த தர்க்கம் இன்றும் இருந்து வருகின்றது.**

பல எதிர்ப்புகளைச் சந்தித்திருந்தபோதும், இது வேதாகம் சுவிஷேசத்தைத் தவிர வேறெதுவுமில்லை.

## அத்தியாயம் 3

இதுவரை நாம் கவனித்து வந்துள்ள உண்மைகளின் அடிப்படையில், நாம் கட்டுரையின் ஆரம்பத்தில் எழுப்பிய கேள்விக்கு நேரடியாக பதிலளிக்க முடியும். அக்கேள்வி: ஓவன் அடிகளார் தனது நூலில் வரையறுக்கப்பட்ட பிராயச்சித்தத்தைத்தானே பாதுகாக்கப் பாடுபட்டிருக்கிறார்? என்பதாகும். ஆனால் உண்மையில் அப்படியல்ல. அவர் அதைக்காட்டிலும் மேலதிகமாகவே செய்துள்ளார். கண்டிப்பாகக் கூறப் போனால், ஓவன் அடிகளாரின் நூலின் நோக்கம் குற்றச்சாட்டுகளுக்குப் பதில்கூறித் தனது கோட்பாடுகளைப் பாதுகாப்பது அல்ல; அதையும்விட ஆக்கபூர்வமானதை அவரது நூல் செய்துள்ளது. அது வேத பூர்வமானதும், இறையியல் ரீதியிலுமான ஒரு விசாரணை; சுவிஷேசத்தின் மையப் பொருளான இரட்சகரின் சாதனையைக் குறித்து வேதம் உண்மையில் என்ன போதிக்கின்றது என்பதைத் தெளிவு படுத்துவதே இதன் நோக்கமாகும். அவரது நூலின் தலைப்பு பறை சாற்றுவது போல், அது "கிறிஸ்துவின் இரத்தத்தில் அடங்கியுள்ள மீட்பையும், ஒப்புரவாக்குதலையும் பற்றிய ஆய்வுக்கட்டுரை: அதன் பலாபலன்கள் மற்றும் அதனாலுண்டான பாவப்பரிகாரம்". (சென்னை பாப்திஸ்து வெளியீடுகளினால் வெளியிடப்பட்ட இதன் தமிழ் சுருக்கத்தின் தலைப்பு: "மரணத்தினால் உண்டாகும் வாழ்வு")

ஓவன் அடிகளாரும் அவருக்கு முன்னிருந்த டோர்ட் சமயக்குழு அறிஞர்களும் அக்கறையுடன் பதிலளிக்க முனைந்த கேள்வி, சுவிஷேசம் என்றால் என்ன? என்பதுதான். கிறிஸ்துவை இரட்சகராகப் பறை சாற்றுவதே சுவிஷேசம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள். இருபபினும் அவரது இரட்சிக்கும் செயலின் தன்மையும், அவரது மீட்புப்பணியும் யாரை உள்ளடக்கியது? என்பவற்றைக் குறித்த தர்க்கம் இன்றும் இருந்து வருகின்றது. வேதம் இதைப்பற்றிப் போதிப்பது என்ன? கிறிஸ்துவின் செயலின் நோக்கம்தான் என்ன? எதை நிறைவேற்றும்படி அவர் அச்செயலில் ஈடுபட்டார் என்பதைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது? இவற்றையே ஓவன் அடிகளார் விளக்க முனைகிறார். இவற்றை ஓவன் அடிகளார் தனது நூலில் சர்ச்சைக்குரியவகையில் கையாண்டுள்ளார் என்பது உண்மைதான். அதுமட்டுமல்லாமல், "எல்லோருக்குமான ஒரு பொதுவான பரிகாரப்பலியை அவர் செலுத்தினார்; எல்லோரையும் அல்லது ஒவ்வொரு தனி மனிதனையும் பாவத்திலிருந்து விடுவிப்பதற்காக அவர் மரித்தார்" என்ற கோட்பாட்டிற்கு எதிரான வாதங்களை நேரிடையாக எடுத்து வைக்கும் நூலாக அதைப் படைத்தார். இது வெறும் வார்த்தை ஜாலமல்ல; மாறாக ஒழுங்கமைப்புள்ள விளக்கக்கட்டுரை. ஓவன் அடிகளார் இச்சர்ச்சையைப் பயன்படுத்தி இதுபற்றிய அனைத்து வேதபோதனைகளையும் முறையாக விளக்கிக்காட்டக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக இதைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

ஹுக்கர் என்பவருடைய நூலான, "சபை ஆட்சியமைப்பின் சட்ட திட்டங்கள்" என்ற நூலில் காணப்படுவதுபோல், "ஒரு பொருள் நியாயப்படுத்தப்படும்போது அதற்கான வாதங்கள் அனைத்தும் தற்செயலானதும், நியாயப்படுத்தப்படும் பொருளையும்விட கனத்தில் குறைந்தவையுமாகும்; ஆனால் ஒரு எழுத்தாளர் எவ்வாறு அவ்வாதங்களைத் தனது நோக்கங்களை எடுத்துச் சொல்லப் பயன்படுத்திக் கொள்கிறார் என்பதிலேயே அவ்வாதங்களின் சிறப்புத் தன்மை தங்கியுள்ளது." *(வளரும்)*

***வேதம் போதிக்கும் கர்த்தரின் வழிகளைப் பூரணமாகப் புரிந்து கொள்பவனே மிகச் சிறந்த இறையியல் வல்லுனன்; வேதம் கட்டளையிட்டுப் போதிக்கும் கடமைகளைத் தன் வாழ்வில் தவறாது பின்பற்றுபவனே மிகச் சிறந்த கிறிஸ்தவன். - மொரிஸ் ரொபட்ஸ்***

# எண்ணங்கள் !

### படித்துப் பயனடைந்தோம்!

ஜூலை–செப்டம்பர் இதழை எனது சபையார், சக ஊழியர்கள், நண்பர்கள், வேதாகமக் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆகியோருடன் சேர்ந்து படித்தேன். சில காரியங்களைக் குறித்து வெகு நேரம் படித்தோம். ஆலோசித்தோம். ஊழிய அழைப்பு பகுதி தனிப்பட்ட முறையில் பயனுள்ளதாக இருந்தது. யொங்கி சோ பற்றிய கட்டுரை (நான்காம் பரிமாணம்) பலருக்கும் உதவ ஜெபிக்கிறேன். தைரியமாக முன் செல்லுங்கள். ஜெபத்தில் தொடர்ந்து உங்களைத் தாங்குகிறோம்.

*பாஸ்டர் ராஜா, நெல்லை, தமிழ்நாடு*

தங்களால் வெளியிடப்படும் திருமறைத்தீபம் என்னும் சத்தியத்தை விளங்க வைக்கும் இதழை முதல் முறையாக எனது போதகர் மூலம் கிடைக்கப்பெற்று வாசித்துப் பயனடைந்தேன். தேவைக்குரிய காலங்களில், தேவன் தேவைக்குரியவர்களையும், தனது தேவைக்கேற்பத் தெரிந்து கொள்கிறார் என்பதைத் தங்களுடைய இதழ் மூலம் மிகத் தெளிவாக விளக்கியுள்ளீர்கள். தப்பான போதனைகள் மலிந்து மக்களை நலிவுறச் செய்யும் இந்நாட்களில், இனிய தமிழில், அதிலும் தெளிவான கருத்துக்களோடு வெளிவரும் திருமறைத்தீபத்தின் சேவை தொடர கர்த்தர் பேரருள் புரிவாராக!

*ம. யேசுதாஸ் ரேவல், பேசாலை, ஸ்ரீலங்கா*

திருமறைத்தீபம் பத்திரிகையை கடந்த சில மாதங்களாக நான் குடும்பத்தோடு வாசித்து வருகிறேன். "கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை" கட்டுரை எங்கள் மத்தியில் பெரும் கலந்துரையாடலை ஏற்படுத்தி அனைவரையும் சிந்திக்க வைத்துள்ளது. பத்திரிகைக்காக உங்களைப் பாராட்டுகிறோம்.


*டாக்டர் திருமதி பேர்ள் கிட்டு, நாமக்கல், தமிழ்நாடு*

ஜூலை–செப்டம்பர் இதழை முதல் முறையாக வாசித்தேன். பல வருடங்கள் கிறிஸ்தவனாகவும், முழு நேர ஊழியக்காரனாகவும் இருக்கின்ற எனக்கு ஆச்சரியத்தையும், அறிவையும், ஊக்கத்தையும் தரும் பல அம்சங்களை இவ்விதழின் பல பக்கங்களில் கண்டேன். உங்கள் பத்திரிகை என் ஊழியத்திற்குப் பயன்படும். தயவு செய்து அனுப்புங்கள்.

*Rev. வில்சன் வில்லியம், தென்காசி. தமிழ்நாடு*

திருமறைத்தீபம் கிடைத்தது. மிகவும் பிரயோஜனமாக சிந்திக்கக்கூடிய அளவில் ஒவ்வொரு கட்டுரைகளும் அமைந்திருந்தன. இன்னும் அதிகமாக ஆண்டவருக்கென்று வாழ வேண்டுமென்ற பயம் உண்டாகி உள்ளது. கர்த்தருக்கே மகிமை.

*எஸ். சுசிபிரபாகரதாஸ், மதுரை, தமிழ்நாடு*



## உள்ளே . !

1. போல் யொங்கி சோ
2. ஊழிய அழைப்பு
3. அர்ப்பண அழைப்பு ஏன் தவறானது?
4. தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு
5. சார்ள்ஸ் பினி
6. கிறிஸ்தவக் கோட்பாடுகள்
7. வில்லியம் கேரி
8. கிருபையின் கோட்பாடுகள் - ஓர் அறிமுகம்
9. எண்ணங்கள் !